**கவனிக்க.**- 2026.03.20 ஆந் திகதிய 2481 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2482 - 2026 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2026.03.27

2482 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 778 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 822 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


775 - B 82777- 403 (2026/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

## பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன் கீழ் காதி நீதிபதிகளை நியமித்தல் - 2026

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணபதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியாக அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 7,500.00 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250.00 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, விண்ணப்பங்கள் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்தினம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2026, மார்ச்சு 27.

**அட்டவணை**

| | *காதி நீதிமன்றம்* | *காதி நீதிமன்ற அதிகாரப் பகுதி* |
|---|---|---|
| 01 | அட்டாளைச்சேனை | அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவு |
| 02 | அக்கரைப்பற்று | அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு |
| 03 | அநுராதபுரம் | அநுராதபுர மாவட்டத்தின் நுவரகம, ஹுருலுகம, தலகம ஆகிய இறைவரிப்பிரிவு |
| 04 | அவிஸ்ஸாவளை | அவிஸ்ஸாவளை நீதிப்பிரிவு |
| 05 | பலப்பிட்டி/எல்பிட்டி | பலப்பிட்டி/எல்பிட்டி நீதிப்பிரிவு |
| 06 | பேருவளை | களுத்துறை மாவட்டத்தின் பேருவளை பிரதேச செயலாளர் பிரிவு |
| 07 | போறா சமூகம் | இலங்கை போறா சமூகம் |
| 08 | பியகம | கம்பஹா மாவட்டத்தின் பியகம, தொம்பே, களனி, வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு |
| 09 | கொழும்பு கிழக்கு | கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட புதுக்கடை, கிரேன்பாஸ், மாலிகாவத்தை, செபஸ்தியன் வீதி, புதிய பஸார், தொடலங்க, கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, பாதுக்கை, ஹோகந்தர, மீகொட, கொடகம, பனாகொட, மாலபே, தலங்கம வடக்கு, கொடிகாவத்த, புத்கமுவ நீதிப்பிரிவு பிரதேசங்கள் |
| 10 | கொழும்பு மேற்கு | கொழும்பு நீதிப்பிரிவுக்குட்பட்ட தெஹிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, நுகேகொடை, பெபிலியான, மஹரகமை, பன்னிப்பிட்டிய, ஹோமாகம, பொல்கஸ்ஓவிட்ட, இங்கிரிய, ராஜகிரிய, பத்தரமுல்லை, அத்துருகிரிய பிரதேசங்கள் |

| | *காதி நீதிமன்றம்* | *காதி நீதிமன்ற அதிகாரப் பகுதி* |
|---|---|---|
| 11 | ஏறாவூர்பற்று | மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று இறைவரிப் பிரிவு |
| 12 | காலி | காலி மாவட்டத்தின் காலி நீதிப்பிரிவு |
| 13 | கம்பஹா | கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, மீரிகம, மஹர பிரதேச செயலாளர் பிரிவுகள் |
| 14 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை நீதிப்பிரிவு |
| 15 | ஹரிஸ்பத்துவ பூஜாபிட்டிய | கண்டி மாவட்டத்தின் ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகள் |
| 16 | இறக்காமம் | அக்கரைப்பற்று நீதிப்பிரிவுக்குட்பட்ட வரிப்பதான்சேனை, ஒட்டிபுரம், அமீரலிபுரம், 10 ஆம் பிரிவு ஏ, 11 ஆம் பிரிவு ஏ, நல்லவன்திமலை, இறக்காமம் கிராம அலுவலர் பிரிவு 01 முதல் 09 பிரிவு |
| 17 | கற்பிட்டி | புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு |
| 18 | களுத்துறை | களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை நீதிப்பிரிவு |
| 19 | கண்டி | கண்டி மாவட்டத்தின் கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை ஆகிய இறைவரிப் பிரிவு |
| 20 | கேகாலை | கேகாலை மாவட்டத்தின் கேகாலை நீதிப்பிரிவு |
| 21 | குளியாபிட்டி | குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டி, திவுரும்பொல, ஆரிகாமம், ஹெட்டிபொல, பன்னலை, பண்டாரகொஸ்வத்தை, எலபடகம, பும்மன்னை, நாரம்மல, தம்பதெனியா, ஹொரம்பாவ, எதுன்கஹகொட்டுவ, கெகுனுகொல்ல, கொபைகனை, அறக்கியால மற்றும் இப்பிரதேசங்களுக்கு உரித்தான ஏனைய சிறிய கிராமங்கள் |
| 22 | குருநாகல் | குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் நீதிப்பிரிவு |
| 23 | மன்னார் | மன்னார் மாவட்டத்தின் மன்னார் மற்றும் மாந்தை இறைவரிப் பிரிவு |
| 24 | மேமன் சமூகம் | இலங்கை மேமன் சமூகம் |
| 25 | மொணராகலை | மொணராகலை மாவட்டத்தின் மொணராகலை நீதிப்பிரிவு |
| 26 | மூதூர் (கொடியார் பற்று) | திருகோணமலை மாவட்ட கொடியார்பற்று இறைவரிப் பிரிவு |
| 27 | நாவலப்பிட்டி | கண்டி மாவட்டத்தின் உடபுலத்கமை இறைவரிப் பிரிவு மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் ஹப்புகஸ்தலாவை பிரதேசங்கள் |
| 28 | நிந்தவூர்பற்று | அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவு |
| 29 | நுவரெலியா | நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா நீதிப் பிரிவு |
| 30 | ஓட்டமாவடி | மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று மேற்கு இறைவரிப் பிரிவு |
| 31 | பஹத ஹேவாஹொட்ட | கண்டி மாவட்டத்தின் பஹத ஹேவாஹெட்ட பிறப்பு, விவாக மற்றும் மரணப்பதிவாளர் பிரிவு |
| 32 | பொத்துவில் | அம்பாறை மாவட்டத்தின் பானம்பற்று (பொத்துவில்) இறைவரிப் பிரிவு |
| 33 | புல்மோட்டை | திருகோணமலை மாவட்டத்தின் கட்டுகுளப்பற்று கிழக்கு, மேற்கு இறைவரிப்பிரிவு |
| 34 | இரத்தினபுரி | இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி நீதிப்பிரிவு |
| 35 | இடம்பெயர்ந்தவர்கள் | புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கானது |
| 36 | கரைவாகுப்பற்று தெற்கு (சாய்ந்தமருது) | அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவு |
| 37 | தம்பலகாமம் கந்தளாய் | திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு |
| 38 | தங்காலை | அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை நீதிப்பிரிவு |
| 39 | திருகோணமலை | திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகர பிரதேச செயலாளர் பிரிவு, கிரவட்ஸ், மொராவெவ பிரதேச செயலாளர் பிரிவு |
| 40 | தும்பனை | கண்டி மாவட்டத்தின் தும்பனை பிரதேச செயலாளர் பிரிவு |
| 41 | உடபலாத கம்பளை | கண்டி மாவட்டத்தின் கம்பளை (உடபலாத) நீதிப்பிரிவு |
| 42 | வாழைச்சேனை (கோரளைப்பற்று) | மட்டக்களப்பு மாவட்ட கோரளைப்பற்று வடக்கு (ஓட்டமாவடி தவிர்ந்த) இறைவரிப் பிரிவு |
| 43 | யடிநுவர | கண்டி மாவட்டத்தின் யடிநுவர இறைவரி பிரிவு |
| 44 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் மாவட்டத்தின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை மறறும் ஊர்காவற்றுறை நீதிப்பிரிவு |

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115 இன்) கீழ் காதிப் பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

காதிப்பிரிவு :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம், ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

6. வயது :

7. இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ----------------------------------------------------------------------------------------------------
2. ----------------------------------------------------------------------------------------------------
3. ----------------------------------------------------------------------------------------------------
4. ----------------------------------------------------------------------------------------------------
5. ----------------------------------------------------------------------------------------------------

12. தொழில் தகைமைகள் :
1. ------------------------------------------------------------
2. ------------------------------------------------------------
3. ------------------------------------------------------------
4. ------------------------------------------------------------
5. ------------------------------------------------------------

13. எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

| | |
|---|---|
| | |
| | |

14. இஸ்லாம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? : ஆம் [ ] இல்லை [ ]

15. விவாகமானவரா ? : ஆம் [ ] இல்லை [ ]

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா? : ஆம் [ ] இல்லை [ ]

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| *முதல்* | *வரை* | *தொழில்* | *இடம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூபா [ ]

19. மாதாந்த வருமானம் : ரூபா [ ]

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூபா [ ]

21. சென்ற 10 வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? : ஆம் [ ] இல்லை [ ]

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? : ஆம் [ ] இல்லை [ ]

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதும் உள்ளதா? இருந்ததா ? : ஆம் [ ] இல்லை [ ]

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? : [ ]

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----------------.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

03-1135

**நீதிச்சேவை ஆணைக்குழு**

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன் கீழ் காதிச் சபை தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமித்தல் - 2026

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் (நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் தவிர) இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதிச் சபை தலைவருக்கு மாதாந்தம் ரூபா 15,000.00 நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 3,750.00 வீதம் மாதமொன்றுக்கு ரூபா 15,000.00 இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும், அங்கத்தவர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 12,000.00 நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 2,000.00 வீதம் மாதமொன்றுக்கு ரூபா 8,000.00 இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, விண்ணப்பங்கள் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதிச் சபை" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்தினம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2026, மாச்சு 27.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115 இன்) கீழ் காதிகள் சபைக்கு தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

மாவட்டம் :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம், ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி : | தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

6. வயது :

7. இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ----------
2. ----------
3. ----------
4. ----------
5. ----------

12. தொழில் தகைமைகள் :

1. ----------
2. ----------
3. ----------
4. ----------
5. ----------

13. எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. இஸ்லாம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? : ஆம் ☐ இல்லை ☐

15. விவாகமானவரா ? : ஆம் ☐ இல்லை ☐

16. நீர் ஒரு சட்டத்தரணியா ? : ஆம் ☐ இல்லை ☐

17. சட்டத்தரணியாயின் இணைத்துக் கொள்ளப்பட்ட திகதி : | தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

18. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| *முதல்* | *வரை* | *தொழில்* | *இடம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

19. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூபா

20. மாதாந்த வருமானம் : ரூபா

21. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூபா

22. சென்ற 10 வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? : ஆம் [ ] இல்லை [ ]

23. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? : ஆம் [ ] இல்லை [ ]

24. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதும் உள்ளதா? இருந்ததா ? : ஆம் [ ] இல்லை [ ]

25. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? :

26. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----------------,

திகதி :-----------------. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

03-1136

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு**

**சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

## இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இற்கு 2026.01.01 இல் நிலவும் 18 வெற்றிடங்களுக்காக 2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை ஆயுர்வேதமருத்துவசேவையின்சேவைப்பிரமாணக்குறிப்பின் பிரகாரம் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிரல் அமைச்சு/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமை புரியும் ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இன் மருத்துவ உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகள் :**

(i) ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இல் 03 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் மூன்று (03) சம்பளவேற்றங்களை உழைத்திருத்தல்;

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுத் தண்டனை பெறாதிருத்தல் ;

(iii) பின்னிணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளவாறு ஆயுர்வேத வைத்தியசாலை முகாமைத்துவம் பற்றிய குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப் பின் பட்டம் பெற்றிருத்தல்.

02. **பதவியுயர்வுத் திட்டம்.-**

2.1 பதவி வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள மேற்குறித்த தகைமை களைப் பூர்த்தி செய்துள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்கள் கோரப் படும். நியமன அதிகாரியால் நேர்முகப் பரீட்சை சபையை நியமித்தல் மற்றும் அதற்கு ஏற்புடைய புள்ளி வழங்கும் நடைமுறையை அங்கீகரித்தல் ஆகியன மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் ஏற்புடைய நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரைகள் அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் நியமன அதிகாரிக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.2 இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் I இற்குரிய பதவியுயர்வானது வருடாந்த மதிப்பீடு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

2.3 அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் வெற்றிடங்களை நிரப்பும் போது 2023.10.27 மற்றும் அதற்குப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது யூலை மாதம் 01 ஆந் திகதி செயல்வலுவுக்கு வரத்தக்க வகையிலேயே பதவியுயர்வு மேற்கொள்ளப்படும்.

03. **வெற்றிடம் நிலவும் பதவிகள் எண்ணிக்கை 18 ஆகும்.**

ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இல் நிலவும் 18 வெற்றிடங்கள் பின்வருமாறு

| *தொ. இல.* | *வெற்றிடம் நிலவும் திகதி* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | 2023.10.27 இல் | 13 |
| 2. | 2024.01.01 இல் | 01 |
| 3. | 2024.07.01 இல் | 01 |
| 4. | 2025.01.01 இல் | 02 |
| 5. | 2025.07.01 இல் | 0 |
| 6. | 2026.01.01 இல் | 01 |

3.1 2023.10.27 ஆந் திகதி முதல் 2001.01.01 ஆந் திகதி வரை ஒவ்வொரு மாதமும் உருவாகிய நிர்வாகம் தரம் II இன் வெற்றிடங்களுக்காக (உதா: 2023.10.27 இல், 2024.01.01 இல், 2024.07.01 இல் என்ற ரீதியில்) பதவியுயர்வு மேற்கொள்ளப்படுவதால் அத்தகைய திகதிகளின் போது மேற்குறித்த

தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

| *பதவிப் பெயர்* | *வைத்தியசாலை/ நிறுவனம்* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|---|
| பணிப்பாளர் | பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம், நாவின்ன | 01 |
| | ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை, பொரளை | 01 |
| | கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேதபோதனா வைத்தியசாலை | 01 |
| | சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம், அம்பாறை | 01 |
| | சித்தாயுர்வேத போதனா வைத்தியசாலை, கோனேஷ்புரி, திருகோணமலை | 01 |
| | சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை | 01 |
| | யூனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மஞ்சன்தொடுவாய், மட்டக்களப்பு | 01 |
| | ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி | 01 |
| பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு - சுதேச மருத்துவ பிரிவு | 01 |
| மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | தென் மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | வட மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| | சப்பிரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 01 |
| **மொத்தம்** | | **18** |

3.2 ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் மேலே இலக்கம் 01 இல் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

04. இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் (விண்ணப்பத்தை www.ayurveda.gov.lk ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்) தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2026.04.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் ஆயுர்வேத ஆணையாளர் நாயகம், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களை நிர்வாக தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இன் ஏற்புடைய ஆரம்ப சம்பளம் 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் SL 1-2016 அல்லது 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் SL 1-2025 சம்பளக் குறியீட்டின் 20 ஆம் படிமுறை ஆகும் என்பதுடன் அச்சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

06. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கும் நடைமுறை பின்வருமாறு :

6.1 **சேவைக் காலம்** :

(ஆகக்கூடிய புள்ளி 20)

மேலே இலக்கம் 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களில் நிர்வாக சேவை தரம் II இற்கு பதவியுயர்வு பெற்று 03 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தின் பின்னரான பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு,

| | |
|---|---|
| 03 மாதத்திற்கும் | 02 புள்ளிகள் |
| 06 மாதத்திற்கும் | 04 புள்ளிகள் |
| ஆண்டுக்கும் | 08 புள்ளிகள் |

குறிப்பு 01 :

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்படும்.

6.2 **பயிற்சி** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 10)**

(அ) சான்றிதழ் பத்திர பாடநெறி, 02 தினங்களுக்கு மேற்பட்ட 05 தினங்களுக்கு குறைவான பாடநெறி சான்றிதழ் பத்திரத்துக்கு 0.5 புள்ளிகள் வீதம் 02 புள்ளிகள்

(ஆ) 05 தினங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் பத்திர பாடநெறி, சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் 08 புள்ளிகள்

குறிப்பு 02 :

(i) நிறுவனத் தலைவரின் முன் அனுமதியின் கீழ் கற்ற பாடநெறி அல்லது அவ்வாறு இல்லாதுவிடின், அரசாங்க, பகுதியளவு அரசாங்க, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட (அரசாங்க நிறுவனம் ஒன்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட) நிறுவனம் ஒன்றில் ஏற்புடைய பாடநெறியை கற்றிருத்தல் வேண்டும்.

(ii) மேலே அனைத்து 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகளையும் பதவியுயர்வு நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

6.3 **மேலதிக கல்வித் தகைமைகள் :**

**(ஆகக்கூடிய புள்ளிகள் 30)**

நிர்வாக சேவை தரம் I பதவிக்காக கருத்திற் கொள்ளப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனம், பட்டப்பின் படிப்பு கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து அல்லது பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத ஆயுர்வேத வைத்தியசாலை முகாமைத்துவம் பற்றிய பட்டப் பின் பட்டத்துக்கு மேலதிகமாக ஏனைய கல்வித் தகைமைகள் தொடர்பில், கருத்திற் கொள்ளப்படும்.

** முகாமைத்துவம், நிர்வாகம், வணிக முகாமைத் துவம், பெறுகை மற்றும் கணக்கீடு, சட்டம், பொருளியல் போன்ற நிர்வாக விடயத் துறைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/ வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது உள்நாட்டு / வெளிநாட்டு பட்டப் பின் படிப்பு கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் பட்ட தகைமைகளுக்காக,

(அ) டிப்ளோமா, 06 மாதத்துக்கு குறையாத டிப்ளோமாவுக்கு
புள்ளிகள் 05

(ஆ) உயர் டிப்ளோமா, ஒரு வருடத்துக்கு கூடுதலான டிப்ளோமாவுக்கு
புள்ளிகள் 06

(இ) பட்டம்,** ஏற்புடைய பட்டத்துக்கு
புள்ளிகள் 08

(ஈ) பட்டப் பின் பட்டம்,** ஏற்புடைய பட்டப் பின் பட்டத்துக்கு
புள்ளிகள் 10

(உ) முனைவர் (Ph.D),** ஏற்புடைய முனைவர் பட்டத்துக்கு
புள்ளிகள் 12

குறிப்பு 03 :

மேலே 6.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக கல்வித் தகைமைகளை பதவியுயர்வு நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

6.4 **வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சிகள் :**

**(ஆகக்கூடிய புள்ளிகள் 15)**

சர்வதேச/ தேசிய ரீதியிலான சஞ்சிகைகள்/ நூல்கள்/ வெளியீடுகள் ஆகியவற்றுக்காக

(அ) சர்வதேச மட்ட சஞ்சிகைகளில் அறிவுசார் வெளியீடுகள் அல்லது ஆராய்ச்சிகளுக்காக (ஒன்றுக்கு 04 புள்ளிகள் வீதம் ஆகக் கூடிய புள்ளிகள் 08)

(ஆ) வெளியிடப்பட்ட அறிவுசார் நூல்களுக்காக (ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடிய புள்ளிகள் 04)

(இ) தேசிய மட்ட சஞ்சிகை / வெளியீடு / பத்திரிகை ஒன்றில் 500 சொங்களுக்கு குறையாத ஆய்வுக் கட்டுரைகளுக்காக (ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடிய புள்ளிகள் 03)

குறிப்பு 04 :

(i) நூலாசிரியர்கள் பலரது பங்கேற்பில் வெளியிடப் பட்ட வெளியீடுகள் தொடர்பில் விண்ணப்பதாரரின்

பங்களிப்பின் அளவு தெளிவாக காட்டப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பங்களிப்பின் அளவின் விகிதாசாரமாக விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) ஒரே தரவு/ ஆராய்ச்சி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும், பெரும்பாலும் சமமான முடிவுகளுக்கு வந்துள்ள வெளியீடுகள் வெவ்வேறான வெளியீடுகளாக கருதப்பட மாட்டாது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் புள்ளி வழங்குவதற்காக ஒரு வெளியீடு மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.

(iii) நிர்வாக தரம் II பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் மேலே 6.4 இன் கீழ் வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சிகள் மாத்திரம் இங்கு கருத்திற் கொள்ளப்படும்.

(iv) முகாமைத்துவம், நிர்வாகம், வணிக முகாமைத்துவம், பெறுகை மற்றும் கணக்கீடு, சட்டம், பொருளியல் போன்ற நிர்வாக விடயத் துறைகள் மற்றும் ஆயுர்வேத மருத்துவத் துறை தொடர்பான வெளி யீடுகள் மற்றும் ஆராய்ச்சிகள் இங்கு கருத்திற் கொள்ளப்படும்.

(v) மேற்குறித்த அனைத்து வெளியீடுகள் சம்பந்தப்பட்ட பதவியுயர்வு நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

6.5 **ஏனைய தகைமைகள்** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 15)**

(அ) இணைப்பு மொழி பற்றிய பாடநெறிக்கு (6 மாதங்களுக்கு மேற்பட்ட) (புள்ளிகள் 03)

(ஆ) தகவல் தொழில்நுட்பம் பற்றிய பாடநெறிக்கு (6 மாதங்களுக்கு மேற்பட்ட) (புள்ளிகள் 03)

(இ) துறைக்கு ஏற்புடையதாக ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றல் மற்றும் ஏனைய விசேட கடமைகளுக்காக (பாராட்டுக் கடிதம் உரிய படிவம் மூலம் (பொது 230பீ) திணைக் களத் தலைவர் உள்ளிட்ட அதற்கு மேல் உள்ள பதவியின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் வழங்கப்பட்ட) கடிதம் ஒன்றுக்கு (புள்ளிகள் 2.5)

**குறிப்பு 05 :** மேற்குறித்த தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கும் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, சுகாதார அமைச்சு அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று மூலம் வழங்கப்படும் சான்றிதழ் பத்திர பாடநெறி மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும்.

**குறிப்பு 06 :** மேற்குறித்த அனைத்து தகைமைகளும் பதவியுயர்வு நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

6.6 **நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமை** :

**(ஆகக்கூடிய புள்ளிகள் 10)**

(திறமை, தலைமைத்துவம், மனோபாவம், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைக்காக)

07. தெரிவு செய்யப்படும் முறை : நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களின் கல்வி, தொழில், சேவைமூப்பு, சேவை அனுபவம், மற்றும் பயிற்சி தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த புள்ளி வழங்கும் நடைமுறைக்கு அமைவாக ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களை நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

08. இந்த அறிவித்தல் மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும். மேலும் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள மொழியே செயல்வலுப் பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளைப் பிரகாரம்,

செயலாளர்,
சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக
அமைச்சு.

கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பம்

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :..........................................................................................................................

02. முழுப்பெயர் :..........................................................................................................................

03. பிறந்த திகதி :..........................................................................................................................

04. தேசிய ஆளடையாள அட்டை இல. :..........................................................................................................................

05. (i) நிரந்தர முகவரி :..........................................................................................................................

(ii) கையடக்க தொலைபேசி இலக்கம் :..........................................................................................................................

(iii) மின்னஞ்சல் முகவரி :..........................................................................................................................

06. (i) சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :..........................................................................................................................
(நிர்வாக தரம் II பதவிக்கான)

(ii) தொலைபேசி இலக்கம் :..........................................................................................................................

07. (i) முதல் நியமனத் திகதி :..........................................................................................................................

(ii) நிர்வாக தரம் II இற்கு பதவியுயர்வு பெற்ற திகதி :..........................................................................................................................

(iii) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு நிர்வாக தரம் II இல் சேவைக் காலம் :..........................................................

08. சேவை அனுபவம் :..........................................................................................................................

09. பெற்றுள்ள பட்டப் பின் பட்டம் தொடர்பான தகைமைகள் :
(இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு III பின்னிணைப்பின் பிரகாரம்)

| *நிறுவனம்* | *பெற்றுள்ள பட்டப் பின் பட்டத்தின் பெயர்* | *காலம்* | *பூர்த்தி செய்த திகதி (பயிற்சிக் காலம் உள்ளடங்கலாக)* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

10. ஏனைய அரசகரும மொழிகள் தொடர்பான தேர்ச்சி :
(i) சிங்களம்/ தமிழ் ஆண்டு :..........................................................................................................................

11. சம்பளமற்ற லீவு/ அரைச் சம்பள லீவு/வெளிநாட்டு லீவு (சம்பளமற்ற/ சம்பளத்துடன்) பெற்றிருப்பின் அது தொடர்பான விபரம் :

| சம்பளமற்ற லீவு/ அரைச் சம்பள லீவு/ வெளிநாட்டு லீவு (சம்பளமற்ற/சம்பளத்துடன்) பெறுவதற்கான காரணம் | லீவு கால எல்லை<br>முதல் வரை | பெறப்பட்ட லீவுகளின் அளவு<br>ஆண்டு மாதம் திகதி |
|---|---|---|
| | | |

12. உங்களது சேவைக் காலத்திற்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? (அவ்வாறாயின்)

| ஒழுக்காற்றுத் தீர்மானம் | குற்றச்சாட்டின் பிரகாரம் குற்றம் புரியப்பட்ட கால எல்லை |
|---|---|
| | |

மேலே காட்டப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதென உறுதிசெய்கின்றேன்.

பெயர் :................................................

கையொப்பம்: ....................................

திகதி :....................

**நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

திரு./ திருமதி/ செல்வி ........................................................... ஆல் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதெனவும் அண்மைய 05 ஆண்டுகளுக்குள் உத்தியோகத்தர் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை எனவும் அண்மைய 05 ஆண்டுகளுக்குள் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது*/ எடுக்கப்படவில்லை எனவும் உறுதி செய்கின்றேன்.

.................... ....................................

திகதி நிறுவனத் தலைவரின்/ பிரதம செயலாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

* ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் அது பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும்.

* பூர்த்தியற்ற முறையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்படல் நிராகரிக்கப்படும் எனவும், மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக காணப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவும் இன்றி நிராகரிக்கப்படும்.

03-1093

## இலங்கைப் பாராளுமன்றம்

### வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ ஆம் உறுப்புரையின் கீழ், எல்லை வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவிருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வரையறை ஆணைக்குழுவானது அரசியலமைப்பின் 95 ஆம் உறுப்புரையின் கீழ், கௌரவ சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்திருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்தியுறுதல் வேண்டும்.

இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் (www.parliament.lk) "வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற "விரைவான அணுகல்" கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு,

அரசியலமைப்புச் சபைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புச் சபை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

பதிவுத் தபால் மூலமாக அல்லது constitutionalcouncil@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக 2026, ஏப்பிறல் 10 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் மேல் இடதுபுற மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக 'வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்' எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, மாச்சு 26.

03-1194

## இலங்கைப் பாராளுமன்றம்

### நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ மற்றும் 154ண எனும் உறுப்புரையின் கீழ், நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மூன்று பிரதான சமுதாயங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் நிதி, சட்டம், நிருவாகம், தொழில் அல்லது கற்றல் துறைகளில் சிறப்பெய்தியுள்ள அல்லது உயர் பதவி வகித்துள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் (www.parliament.lk) ''நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற "விரைவான அணுகல்" கிடைக்கப்பெறும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு,

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

பதிவுத் தபால் மூலமாக அல்லது constitutionalcouncil@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2026, ஏப்பிறல் 10 ஆந் திகதியன்று அலலது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபுற மூலையில் அல்லது மின்னஞ்சலின் தலைப்பில் ''நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் வெளியிடப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, மாச்சு 26.

03-1195

## இலங்கைப் பாராளுமன்றம்

### தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ மற்றும் 155அ (1) எனும் உறுப்புரைகளின் கீழும், 155அ (2) மற்றும் 155அ (3) எனும் உறுப்புரைகளுக்கு உட்பட்டும், தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விதந்துரைப்பதற்காக ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது.

விண்ணப்பங்கள், இலங்கைப் பாராளுமன்ற இணையத் தளத்தில் (www.parliament.lk) "தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற "விரைவான அணுகல்" கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு,

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

பதிவுத் தபால் மூலமாக அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2026, ஏப்பிறல் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

கடித உறையின் மேல் இடதுபுற மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக ''தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசரிக்கப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, மாச்சு 26.

03-1196

## இலங்கைப் பொலிஸ்

### திருத்தம்

### இலங்கை பொலிசுக்கு உபசேவை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆண்/ பெண் (சட்ட அதிகாரி) பதவிக்கு விண்ணப்பம் கோரல்

2026.02.20 ஆந் திகதியிட்ட, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இலக்கம் 2411 பகுதி I (II அ) இல், பக்கங்கள் 04 முதல் 07 வரை, 'வெளியீடுகள்' என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசித் திகதி, 2026.04.20 வரை நீடிக்கப்படுகிறது.

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு - 02,
2026, மாச்சு 23.

03-1149

---

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி/ விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் நிலவும் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி/ விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. www.police.lk இணையத்தளத்தில் நுழைய எங்களுடன் சேர "(join us)" விருப்பத்தைத் தேர்வு செய்வதன் மூலம் (Click செய்து) அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீடு ஸ்கேன் (Scan) மூலம் கீழே சேர்க்கப்பட்டுள்ள வழி முறையின் மூலம் (Online) மட்டும் அதிகார பூர்வமாக 2026.05.08 ஆந் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும் அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்ப முடியாது முதன்மை சோதனைக்காக வருகை தரும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு வர வேண்டும். (பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தை கையொப்பம் இட்டு கொண்டு வர வேண்டும்.)

(அ) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படுகின்ற காலம் வரை ஏற்படும் தாமதங்கள் மீது எழும் எந்தவொரு பாதகமான விளைவையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

(ஆ) இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(ஈ) இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக என்னால் தீர்மானிக் கப்படும்.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்கு முறைக்கு அமைய நேர்முகப் பரீட்சை நடாத்தப் படும்.

(ஊ) பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் இவ் வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி :**
ரூபா 49,550.00 – 7x540 – 27x670 – ரூபா. 71,420.00 (RS 01-2025) 10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவு களும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) அடிப்படைச் சம்பளம் (2026- 46922.00) - ரூபா 49,550.00

(ஆ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00

(இ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஈ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 12,151.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 28,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பவுகள்

(ஊ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 2,000.00

(எ) தீபகற்பங்கள் கொடுப்பனவு (யாழ்ப்பாணம் தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 2,400.00

(ஏ) சிகரட் கொடுப்பனவு (செயற்பாட்டு வலயங் களுக்காக) - ரூபா 500.00

(ஐ) விவாகக் கொடுப்பனவு (விவாகமான உத்தியோகத் தர்களுக்காக) - ரூபா 300.00

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி :**

ரூபா 49,550.00– 7x540 – 27x670 – ரூபா. 71,420.00 (RS 01-2025) 10/2025 ஆம் இலக்க பொ. நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) அடிப்படைச் சம்பளம் (2026- 46922.00) - ரூபா 49,550.00

(ஆ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00

(இ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஈ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 12,151.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 28,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பனவுகள்

(ஊ) ஊக்குவிப்பு கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 1,500.00

(எ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 2,000.00

(ஏ) அடிப்படைச் சம்பளத்தில் 25% (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 12,387.50

(ஐ) முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு (முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு பாடநெறியை கற்றதன் பின்) - ரூபா 800.00

(ஒ) குளிர் கொடுப்பனவு 8% (உரிமையுள்ள முகாம்களுக்கு மாத்திரம்) - ரூபா 3,964.00

(ஓ) தீபகற்பங்கள் கொடுப்பனவு (யாழ்ப்பாணம் தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 2,400.00

(ஔ) சிகரட் கொடுப்பனவு (செயற்பாட்டு வலயங்களுக்காக) - ரூபா 500.00

(ஃ) விவாகக் கொடுப்பனவு (விவாகமான உத்தியோகத்தர்களுக்காக) - ரூபா 300.00

இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி/ விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி

(அ) போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளில் கூட சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)

(இ) சீருடை

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க பல்கலைக்கழகங்கள், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

(உ) உத்தியோகத்தர்களது விளையாட்டுத் திறன் மற்றும் இயல்பிலேயே காணப்படுகின்ற திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள்.

(ஊ) கடமை நிமித்தமான பிரயாணச் செலவுகளும், கஷ்டப் பிரதேசச் சேவைகள் மற்றும் சிறந்த கடமை நிமித்தம் வழங்கப்படுகின்ற வெகுமதிகள் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து நிதிகளும் வழங்கப்படும்.

04. **தகைமைகள்** :

4.1 **கல்வித் தகைமைகள் :**

கணிதம், விஞ்ஞானம், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு முறைக்கு மேல் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தரச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது

கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு முறைக்கு மேல் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர் தர) தேர்வில் ஒரே அமர்வில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு 01 .- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி, பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும், பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும் கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

குறிப்பு 02 .- க.பொ.த. (சா/த) பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது, அப் பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தி யெய்தியிருப்பின், அப் பாடத்தில் சித்தி அடையவில்லை என்றே கருதப்படும்.

குறிப்பு 03 .- விருப்பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க.பொ.த. (சா/த) பரீட்சை பாடத்திட்டத்தில் அடங்குவதில்லை என்பதால், அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.

4.2 **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **ஏனைய தகைமைகள் :**

4.3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.3.2 விண்ணப்பதாரி கெட்ட நடத்தையுடையவரல்லாமல், சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.3.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(விவாகரத்து செய்யப்பட்டவர்கள், விதவைகள், மற்றும் திருமணமாகாத குழந்தைகள் உள்ளவர்கள் தகுதியற்றவர்கள்.)

4.3.4 தீவின் எப்பாகத்திலேனும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

4.3.5 உயரம் 5 அடி 04 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் (சென்றிமீட்டர் 162.56)

4.3.6 மார்புச் சுற்றளவு 30 அங்குலமாக இருத்தல் வேண்டும். சென்றிமீட்டர் 76.2 (குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

4.3.7 மூக்குக்கண்ணாடி அல்லது தொடு வில்லைகள் இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தபட்ச பார்வைத் திறன் 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும்போது மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.8 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருத்தமற்ற விதத்திலும் கடமைக்குப் பங்கம் ஏற்படும் விதத்திலும் செயற்கை முறையில் உடம்பில் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது.

4.3.9 விண்ணப்பதாரியின் நெருங்கிய உறவினர்கள் (தாய், தந்தை, பாதுகாவலர், நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட திருமணமாகாத அல்லது திருமணமான சகோதரர்கள்/ சகோதரிகள் மற்றும் அவர்களது வாழக்கைத் துணை) எந்தவொரு குற்றச் செயலுக்கும் குற்றவாளிகளாக இல்லாதிருத்தல்.

குறிப்பு 01.- பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான 4:1 மற்றும் 4:4 பந்திகளில் காட்டப்படுகின்ற தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், பந்தி 4:2 மற்றும் 4:3 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற திகதியில் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

குறிப்பு 02.- மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் சிறப்பான விளையாட்டுத் திறமையினைக் கொண்டுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் சம்பந்தமான தகைமையைக் கவனத்திற்கொள்ளாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் நியமன அதிகாரியின் தற்றுணிபின் படி ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.

4.4 **வயதெல்லை :**

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 – 24 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

I **ஆரம்பப் பரீட்சை :**

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் இருந்து தகைமைகளையும் வயதெல்லையையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் ஆரம்பப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையின் போது மேற்குறித்த பந்தி 4.1, 4.2 மற்றும் 4.4இல் விபரிக்கப்பட்டுள்ள (4:3:1, 4:3:2, 4:3:4, 4:3:7 மற்றும் 4:3:9 தவிர) தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

II. **உடற்றகுதித்திறன் பரிசோதனை :**

ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரிகள் பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப் படுகின்ற சபையினால் நடாத்தப்படும் உடற் றகுதித்திறன் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் தோற்றும் வேளையில், அதற்கு முகம்கொடுக்கத் தகுதியானவரென அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தை, இலங்கை வைத்திய சபையில் பதிவுபெற்ற வைத்தியரொருவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| தூரம் ஓடுதல்/ Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களுக்குக் குறைவாயின் | 30 |
| | 03 - 04 நிமிடங் களுக்கிடையில் | 20 |
| | 04 - 05 நிமிடங்களுக் கிடையில் | 10 |
| | 5 நிமிடங்களுக்கு மேல் | சித்தியடையவில்லை |
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித் தல்) | தேர்வு செய்த வகைச் செயற்பாட்டை அவதானிப்பதற்கு 30 நொடிகள் ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுதுவதற்கு 120 நொடிகள் | ஒரு செயலுக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

**குறிப்பு** : 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

06. **எழுத்துமூலப் பரீட்சை :**

உடற்றகுதிப் பரிசோதனை நடாத்தப்பட்டு முடிந்த பின்னர் அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சை கீழ்வரும் பாடங்களின் அடிப்படையில் இடம்பெறும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் தேர்ச்சி | 100 | 40 |
| 02. பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 40 |

07. **தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்ப தாரிகளுள் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் இறங்கு வரிசைப்படி தயாரிக்கப் படும் முன்னுரிமை பட்டியலின்படி, ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கையின் ஐந்து (5) மடங்கு (1:5) விண்ணப்பதாரிகள் மட்டும் இறுதித் தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் கொள்ளப் படும் ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | 40 |
| தொழில் தகைமைகள் | 15 | |
| மொழி ஆற்றல் | 10 | |
| விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| தலைமைத் துவம் / சன சமூக சேவைகள் | 20 | |
| நேர்முகப் பரீட்சை சபையில் காட்டும் திறன் | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **பின்புலப் பரீட்சை** :

08.1 எழுத்துத் தேர்வு மற்றும் திறனறி மதிப்பீட்டு நேர்காணலில் பெற்ற மதிப்பெண்களைச் சேர்த்து, விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப் பெண்களை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அதன் பிறகு, காலியிடங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, காலியிடங்களின் எண்ணிக்கை நிரப்பப்படும் வரை தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பின் புலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

08.2 விண்ணப்பதாரியின் நடத்தை சம்பந்தமாக அறிந்து கொள்ளும் பொருட்டு, விண்ணப்பதாரியினதும் அவருடைய நெருங்கிய உறவினர்களினதும், அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நடத்தை மற்றும் அவர்கள் எப்படியானவர்கள் என்பது சம்பந்தமாக விண்ணப்பதாரி வசிக்கும் பொலிஸ் நிலையம், பொலிஸ் விசேட பணியகம் மற்றும் அரச புலனாய்வு சேவை ஊடாக, புலனாய்வு மற்றும் கடுங்கண்காணிப்பு அறிக்கைகள் பெறப்படும். அப்போது, மோசமான பின்னணி

அறிக்கைகளையுடைய விண்ணப்பதாரிகள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

09. **மருத்துவப் பரிசோதனை :**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள், சுகாதாரம் 169 படிவத்தை பூர்த்தி செய்து பொலிஸ் வைத்தியசாலையில் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது, விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்கும், இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்குமான, உடல் மற்றும் உளத் தகுதிகளை பரீட்சிப்பதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையினால் நடாத்தப்படும் சம்பந்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். சுகாதாரம் 169 படிவம் மற்றும் இலங்கை பொலிஸ் பூர்வ நியமன மருத்துவ இணைப்பு ஆகிய இரண்டு அறிக்கைகளினூடாகவும் உடல், உளத் தகுதி உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்காகக் கருத்தில் கொள்ளப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனைக்கு ஒரு தடவை மட்டுமே உட்படுத்தப்படுவார்கள்.

10. **பயிற்சி :**

10.1 மேற்கண்ட அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும், அவர்கள் பெற்ற புள்ளிகளை இறங்கு வரிசையில் பட்டியலிட்டு, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியில் பயிற்சிக்காக அழைக்கப்படுவார்கள்.

10.2 அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படும்.

10.3 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அந்தத் தீர்மானத்தின் படி, அடிப்படைப் பயிற்சி நீடிக்கப்பட்டால், அதே காலப்பகுதிக்குச் சமமான காலப்பகுதியினால் அவர்களின் தகுதிகாண் காலமும் நீடிக்கப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

11.1 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கீழ்க் காணும் குறித்த 11:3 ஆம் பிரிவிற்கு உட்பட்டு மூன்று (03) வருடகால பயிலுனர் சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

11.2 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்யும் வகையில், தற்போது அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

11.3 விண்ணப்பதாரிகள், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் உட்பட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்கள், தாபன விதிக் கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கைகள், பிற அறிவுறுத்தல் கோவையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

11.4 தகுதிகாண் காலப்பகுதியில் இருக்கும் ஓர் உத்தியோகத்தர் தொடர்பில், அவரது மிக முக்கியமான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, பொலிஸ்மா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் விசேட அனுமதியிருந்தாலேயொழிய அவ் உத்தியோகத்தருக்கு திருமணம் முடிப்பதற்கு முடியாது.

11.5 ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், 05 வருட கட்டாய சேவை காலத்திற்கான ஒப்பந்தமொன்றுக்கு வருதல் வேண்டும். இவ் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளை மீறும் சந்தர்ப்பங்களில், தற்போதுள்ள சட்டங்கள் / தாபன விதிக் கோவை/ அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதானது, அவரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதியிழக்கச் செய்யும். பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. **பதவியின் தன்மை** :

நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்)

13. **பதவியில் நிரந்தரமாக்கல் :**

13.1 தகுதிகாண் காலப்பகுதியில், பயிலுனர் கோப் பொன்று பேணப்படுதல் வேண்டும். தகுதி காண் காலப்பகுதியின் முடிவில், அந்த உத்தி யோகத்தர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுதலானது, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

13.2 தகுதிகாண் காலப்பகுதியில் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு, நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்படும்.

13.3 தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்பட்ட ஓர் அலுவலரின் நியமனத்தை நிரந்தரமாக்குதல், தகுதிகாண் காலப்பகுதியை நீடித்தல் அல்லது நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தற்போது நடைமுறையிலுள்ள நடைமுறைவிதிகளில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

14. **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை :**

| *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்து பரீட்சை / தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (சேவையில் நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழை பெற்றிருத்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழை பெற்றிருத்தல் |

15. **மொழித் தேர்ச்சி :**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித்திறனை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

16. இந்த வர்த்தமானியின் பகுதி 1 இன் பத்தி (1A) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகள் பொருந்தும்.

17. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது வெள்ளை பின்னணியில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படத்தையும் பின்வரும் ஆவணங்களின் நகல்களையும் பதிவேற்ற வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ்;

(ஆ) தேசிய ஆளடையாள அட்டை;

(இ) கல்வித் தகுதிகளைச் சான்றாகக் கொண்ட சான்றிதழ்கள்;

(ஈ) செல்லுபடியாகும் சாரதி ஓட்டுநர் உரிமம்;

(உ) விண்ணப்பதாரர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பணியிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று கூறும் நிறுவனத் தலைவரின் கடிதம். (ஏற்கனவே பணியமர்த்தப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்.) (விண்ணப்பப்படிவத்தின் படிவம் எண். 18 இல் இருக்க வேண்டும்)

(ஊ) நீங்கள் அரசாங்கப் பணி அல்லது ஆயுதப்படைகளை விட்டு வெளியேறியிருந்தால் இராஜினாமா கடிதம்.

18. (அ) ஏற்கனவே அரசாங்கப் பணியில் உள்ள விண்ணப்பதாரிகள், அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென அத்தாட்சிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

19. இவ் அறிவித்தலில் காட்டப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லா வகையிலும் உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் …………………………………………………………………………

இவர்…………………………… திணைக்களம் / நிறுவனத்தின் குழு/யுத்த இராணுவப் படையில் பணியாற்றும் நபர் என்றும், அவர் இந்த பதவிக்கான தேர்வு செய்யப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்று கூறுகிறேன்.

...............................................

நிறுவன தலைவர் கையொப்பம்

பெயர்...............................

திகதி ................................ அதிகாரப்பூர்வ முத்திரை

குறிப்பு - பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவு அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது

பிரியந்த வீரசூரிய
பொலிஸ்மா அதிபர்.

03-1150/1

## இலங்கைப் பொலிஸ்

### பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் / விசேட அதிரடிப் படை பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் நிலவும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் / விசேட அதிரடிப்படை பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரசை களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. www.police.lk இணையதளத்தில் நுழைய எங்களுடன் சேர "(join us)" விருப்பத்தைத் தேர்வு செய்வதன் மூலம் (Click செய்து) அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீடு ஸ்கேன் (Scan) மூலம் கீழே சேர்க்கப்பட்டுள்ள வழிவழி முறையின் மூலம் (Online) மட்டும் அதிகாரபூர்வமாக 2026.05.08 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்ப முடியாது. முதன்மை சோதனைக்காக வருகை தரும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு வர வேண்டும். (பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தை கையொப்பம் இட்டு கொண்டு வர வேண்டும்.)

- 2020.01.24 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி அறிவிப்பு இல. 2160 மற்றும் 2020.02.14 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி அறிவிப்பு இல. 2163 ஆகியவற்றின் படி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யத் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள், "வயது வரம்பு" தொடர்பான நிபந்தனையைப் புறக்கணித்து, பிற அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருப்பின், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படு கின்ற காலம் வரை ஏற்படும் தாமதங்கள் மீது எழும் எந்தவொரு பாதகமான விளைவையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

(ஆ) இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(ஈ) இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக என்னால் தீர்மானிக்கப் படும்.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்குமுறைக்கு அமைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ஊ) பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் இவ் வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி :**

ரூபா 49,550 – 7x540 – 27x670 – ரூபா. 71,420.00 (RS 01-2025) 10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பன வுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) அடிப்படைச் சம்பளம் (2026- 46922.00) - ரூபா 49,550.00

(ஆ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00

(இ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஈ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 12,151.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 28,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பவுகள்

(ஊ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 2,000.00

(எ) தீபகற்பங்கள் கொடுப்பனவு (யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 2,400.00

(ஏ) சிகரட் கொடுப்பனவு (செயற்பாட்டு வலயங் களுக்காக) - ரூபா 500.00

(ஐ) விவாகக் கொடுப்பனவு (விவாகமான உத்தியோகத் தர்களுக்காக) - ரூபா 300.00

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) விசேட அதிரடிப்படை பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் :**

ரூபா 49,550 – 7x540 – 27x670 – ரூபா 71,420.00 (RS1-2025) 10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) அடிப்படைச் சம்பளம் (2026- 46922.00) - ரூபா 49,550.00

(ஆ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00

(இ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஈ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 12,151.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 28,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பவுகள்

(ஊ) ஊக்குவிப்பு கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 1,500.00

(எ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 2,000.00

(ஏ) அடிப்படைச் சம்பளத்தில் 25% (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 12,387.50

(ஐ) முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு (முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு பாடநெறியை கற்றதன் பின்) - ரூபா 800.00

(ஒ) குளிர் கொடுப்பனவு 8% (உரிமையுள்ள முகாம்களுக்கு மாத்திரம்) - ரூபா 3,964.00

(ஓ) தீபகற்ப கொடுப்பனவு (யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 2,400.00

(ஔ) சிகரட் கொடுப்பனவு (செயற்பாட்டு வலயங் களுக்காக) - ரூபா 2,000.00

(ஃ) விவாகக் திருமண கொடுப்பனவு (விவாகமண உத்தியோகத்தர்களுக்காக) - ரூபா 300.00

**இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் / விசேட அதிரடிப்படை பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி**

(அ) போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளில் கூட சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)

(இ) சீருடை

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரச பல்கலைக்கழகங்கள், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

(உ) உத்தியோகத்தர்களது விளையாட்டுத் திறன் மற்றும் இயல்பிலேயே காணப்படுகின்ற திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள்.

(ஊ) கடமை நிமித்தமான பிரயாணச் செலவுகளும், கஷ்டப் பிரதேசச் சேவைகள் மற்றும் சிறந்த கடமை நிமித்தம் வழங்கப்படுகின்ற வெகுமதிகள் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து நிதிகளும் வழங்கப்படும்.

04. **தகைமைகள்** :

4.1 **கல்வித் தகைமைகள் :**

கணிதம், விஞ்ஞானம், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு முறைக்கு மேல் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது

கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு முறைக்கு மேல் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர் தர) தேர்வில் ஒரே அமர்வில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு 01 இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி, பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும், பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும் கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தி யெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

குறிப்பு 02 க. பொ. த. (சா. / த.) பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது, அப் பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின், அப்பாடத்தில்

சித்தி அடையவில்லை என்றே கருதப்படும்.

**குறிப்பு 03** விருப்பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க. பொ. த. (சா./த.) பரீட்சை பாடத் திட்டத்தில் அடங்குவதில்லை என்பதால், அப்பாடங்களில் சித்தியடைந் திருந்தாலும் க. பொ. த. (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்படமாட்டாது.

4.2 **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **ஏனைய தகைமைகள் :**

4.3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.3.2 விண்ணப்பதாரி கெட்ட நடத்தையுடைய வரல்லாமல், சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.3.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(விவாகரத்து செய்யப்பட்டவர்கள், விதவைகள், கர்ப்பிணிகள் மற்றும் திருமணமாகாத குழந்தைகள் உள்ளவர்கள் தகுதியற்றவர்கள்.)

4.3.4 தீவின்எப்பாகத்திலேனும்சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

4.3.5 உயரம் 5 அடி 01 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (சென்றிமீற்றர் 154.94)

4.3.6 மூக்குக்கண்ணாடி அல்லது தொடு வில்லைகள் இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தபட்ச பார்வைத் திறன் 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும்போது மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.7 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருத்தமற்ற விதத்திலும் கடமைக்குப் பங்கம் ஏற்படும் விதத்திலும் செயற்கை முறையில் உடம்பில் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது.

4.3.8 விண்ணப்பதாரியின் நெருங்கிய உறவினர்கள் (தாய், தந்தை, பாதுகாவலர், நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட திருமணமாகாத அல்லது திருமணமான சகோதரர்கள்/ சகோதரிகள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணை) எந்தவொரு குற்றச் செயலுக்கும் குற்றவாளிகளாக இல்லாதிருத்தல்.

குறிப்பு 01 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படு வதற்குத் தேவையான 4:1 தொடக்கம் 4:4 வரையிலான பந்திகளில் காட்டப் படுகின்ற தகைமைகளை, விண்ணப் பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், பந்தி 4:2 மற்றும் 4:3 இல் காட்டப் பட்டுள்ள தகைமைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற திகதியில் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

குறிப்பு 02 மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் சிறப்பான விளையாட்டுத் திறமையினைக் கொண்டுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான திறமையினை வெளிப் படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் சம்பந்தமான தகைமையைக் கவனத்திற்கொள்ளாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் நியமன அதிகாரியின் தற்றுணிபின் படி ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.

4.4 **வயதெல்லை :**

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 – 24 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

I. **ஆரம்பப் பரீட்சை :**

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் அடிப் படைத் தகைமைகளையும் வயதெல்லையையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆரம்பப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையின் போது மேற்குறித்த பந்தி 4:1 இல் விபரிக்கப்பட்டுள்ள (4:3:1, 4:3:2, 4:3:4, 4:3:6 மற்றும் 4:3:8 தவிர) தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

II. **உடற்றகுதித்திறன் பரிசோதனை :**

ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரிகள் பொலிஸ் மாஅதிபரினால் நியமிக்கப் படுகின்ற சபையினால் நடாத்தப்படும் உடற்

றகுதித்திறன் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் தோற்றும் வேளையில், அதற்கு முகம்கொடுக்கத் தகுதியானவரென அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தை, இலங்கை வைத்திய சபையில் பதிவுபெற்ற வைத்தியரொருவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| தூரம் ஓடுதல் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களுக்குக் குறைவாயின் | 30 |
| | 03 - 04 நிமிடங்களுக்கிடையில் | 20 |
| | 04 - 05 நிமிடங்களுக்கிடையில் | 10 |
| | 5 நிமிடங்களுக்கு மேல் | சித்தியடையவில்லை |
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல்) | தேர்வு செய்த வகைச் செயற்பாட்டை அவதானிப்பதற்கு 30 நொடிகள், ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுதுவதற்கு 120 நொடிகள் | ஒரு செயலுக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

குறிப்பு : 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

06. **எழுத்துமூலப் பரீட்சை :**

உடற்றகுதிப் பரிசோதனை நடாத்தப்பட்டு முடிந்த பின்னர் அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சை கீழ்வரும் பாடங்களின் அடிப்படையில் இடம்பெறும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் தேர்ச்சி | 100 | 40 |
| 02. பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 40 |

07. **தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை** :

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுள் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் இறங்கு வரிசைப்படி தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியலின்படி, ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கையைப் போன்ற ஐந்து (5) மடங்கு (1:5) விண்ணப்பதாரிகள் மட்டுமே இறுதித் தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகவுத் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மாஅதிபரினால் நியமிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | 40 |
| 2. தொழில் தகைமைகள் | 15 | |
| 3. மொழி ஆற்றல் | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம் / சனசமூக சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையில் காட்டும் திறன் | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **பின்புலப் பரீட்சை :**

08.1 எழுத்துமூலப் பரீட்சையிலும், தகவுதிறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளைக் கூட்டி, விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை இறங்கு வரிசைப்படி பட்டியலிட்டு பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகளின் ஒழுங்கு வரிசைக்கு அமைய வெற்றிடங்கள் எண்ணிக்கையைப் போன்று 125% விண்ணப்பதாரிகள் பின்புலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

08.2 விண்ணப்பதாரியின் நடத்தை சம்பந்தமாக அறிந்துகொள்ளும் பொருட்டு, விண்ணப்பதாரியினதும் அவருடைய நெருங்கிய உறவினர்களினதும், அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நடத்தை மற்றும் அவர்கள் எப்படியானவர்கள் என்பது சம்பந்தமாக விண்ணப்பதாரி வசிக்கும் பொலிஸ் நிலையம், பொலிஸ் விசேட பணியகம் மற்றும் அரச புலனாய்வு சேவை ஊடாக, புலனாய்வு மற்றும் கடுங்கண்காணிப்பு அறிக்கைகள் தருவிக்கப்படும். அப்போது, மோசமான பின்னணி அறிக்கைகளையுடைய விண்ணப்பதாரிகள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

09. **மருத்துவப் பரிசோதனை :**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள், சுகாதாரம் 169 படிவத்தை பூர்த்திசெய்து பொலிஸ் வைத்தியசாலையில் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது, விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்கும், இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்குமான, உடல் மற்றும் உளத் தகுதிகளை பரீட்சிப்பதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையினால் நடாத்தப்படும் சம்பந்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். சுகாதாரம் 169 படிவம் மற்றும் இலங்கை பொலிஸ் பூர்வ நியமன மருத்துவ இணைப்பு ஆகிய இரண்டு அறிக்கைகளினூடாகவும் உடல், உளத் தகுதி உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்காகக் கருத்தில் கொள்ளப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனைக்கு ஒரு தடவை மட்டுமே உட்படுத்தப்படுவார்கள்.

10. **பயிற்சி :**

10.1 மேற்கண்ட அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும், அவர்கள் பெற்ற புள்ளிகளை இறங்கு வரிசையில் பட்டியலிட்டு, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியில் பயிற்சிக்காக அழைக்கப்படுவார்கள்.

10.2 அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படும்.

10.3 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அந்தத் தீர்மானத்தின் படி, அடிப்படைப் பயிற்சி நீடிக்கப்பட்டால், அதே காலப்பகுதிக்குச் சமமான காலப்பகுதியினால் அவர்களின் தகுதிகாண் காலமும் நீடிக்கப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

11.1 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் குறித்த 11:3 ஆம் பிரிவிற்கு உட்பட்டு மூன்று (03) வருடகால பயிலுனர் சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

11.2 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்யும் வகையில், தற்போது அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

11.3 விண்ணப்பதாரிகள், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் உட்பட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்கள், தாபன விதிக்கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கைகள், பிற அறிவுறுத்தல் கோவைகளிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

11.4 தகுதிகாண் காலப்பகுதியில் இருக்கும் ஓர் உத்தியோகத்தர் தொடர்பில், அவரது மிக முக்கியமான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, பொலிஸ்மா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் விசேட அனுமதியிருந்தாலேயொழிய அவ் உத்தியோகத்தருக்கு திருமணம் முடிப்பதற்கு முடியாது.

11.5 ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், 5 வருட கட்டாய சேவை காலத்திற்கான ஒப்பந்தமொன்றிற்கு வருதல் வேண்டும். இவ் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளை மீறும் சந்தர்ப்பங்களில், தற்போதுள்ள சட்டங்கள் / தாபன விதிக் கோவை /அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதானது, அவரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதியிழக்கச் செய்யும். பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. **பதவியின் தன்மை** :

நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்)

13. **பதவியில் நிரந்தரமாக்கல் :**

13.1 தகுதிகாண் காலப்பகுதியில், பயிலுனர் கோப்பொன்று பேணப்படுதல் வேண்டும். தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில், அந்த உத்தியோகத்தர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுதலானது, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

13.2 தகுதிகாண் காலப்பகுதியில் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு, நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்படும்.

13.3 தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்பட்ட ஓர் அலுவலரின் நியமனத்தை நிரந்தரமாக்குதல், தகுதிகாண் காலப்பகுதியை நீடித்தல் அல்லது நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தற்போது நடைமுறையிலுள்ள நடைமுறைவிதிகளில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, நியமன அதிகாரி அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

14. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை :**

| *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்து பரீட்சை/ தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையில் நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பெண் பொலிஸ் சார்ஜன் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழை பெற்றிருத்தல் |

| *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்து பரீட்சை/ தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பெண் பொலிஸ் சார்ஜன் மேஜர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழை பெற்றிருத்தல் |

15. **மொழித் தேர்ச்சி :**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித்திறனை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

16. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது வெள்ளை பின்னணியில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படத்தையும் பின்வரும் ஆவணங்களின் நகல்களையும் பதிவேற்ற வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) தேசிய அடையாள அட்டை
(இ) கல்வித் தகுதிகளைச் சான்றாகக் கொண்ட சான்றிதழ்கள்
(ஈ) செல்லுபடியாகும் சாரதி ஓட்டுநர் உரிமம்
(உ) விண்ணப்பதாரர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பணியிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று கூறும் நிறுவனத் தலைவரின் கடிதம். (ஏற்கனவே பணியமர்த்தப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்.) (விண்ணப்பப் படிவத்தின் படிவம் எண். 18 இல் இருக்க வேண்டும்)
(ஊ) நீங்கள் அரசாங்கப் பணி அல்லது ஆயுதப்படைகளை விட்டு வெளியேறியிருந்தால் ராஜினாமா கடிதம்

17. இந்த வர்த்தமானியின் பகுதி I இன் பத்தி (II A) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகள் பொருந்தும்.

18. ஏற்கனவே அரசுப் பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப் படிவத்தின் படிவம் எண். 18 இன் கீழ் உள்ள படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட கடிதத்தை, நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் அதிகாரப்பூர்வ முத்திரையுடன் பதிவேற்ற வேண்டும்.

19. இவ் அறிவித்தலில் காட்டப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லா வகையிலும் உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

| |
|---|
| இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ............................................................................... <br> இவர்................................. திணைக்களம் / நிறுவனத்தின் குழு/யுத்த இராணுவம் படையில் பணியாற்றும் நபர் என்றும், அவர் இந்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்று கூறுகிறேன். <br> .............................................. <br> நிறுவனத் தலைவர் கையொப்பம் <br> பெயர்................................ <br> திகதி ................................ அதிகாரபூர்வ முத்திரை |

குறிப்பு - பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவு அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மாஅதிபர்.

03-1150/2

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி/ விசேட அதிரடிப் படை பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் நிலவும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி/ விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02\. www.police.lk இணையதளத்தில் நுழைய எங்களுடன் சேர "(join us)" விருப்பத்தைத் தேர்வு செய்வதன் மூலம் (Click செய்து) அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீடு ஸ்கேன் (Scan) மூலம் கீழே சேர்க்கப்பட்டுள்ள வழிவழி முறையின் மூலம் (Online) மட்டும் அதிகாரபூர்வமாக 2026.05.08 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்ப முடியாது. முதன்மை சோதனைக்காக வருகை தரும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு வர வேண்டும். (பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தை கையொப்பம் இட்டு கொண்டு வர வேண்டும்.)

(அ) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படுகின்ற காலம் வரை ஏற்படும் தாமதங்கள் மீது எழும் எந்தவொரு பாதகமான விளைவையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

(ஆ) இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(ஈ) இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக என்னால் தீர்மானிக்கப்படும்.

(உ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்கு முறைக்கு அமைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ஊ) பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் இவ் வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும்.

03\. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி :**

ரூபா 49,550 – 7x540 – 27x670 – ரூபா. 71,420.00 (RS 01-2025) 10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) அடிப்படைச் சம்பளம் (2026- 46922.00) - ரூபா 49,550.00

(ஆ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00

(இ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஈ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 12,151.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூபா 28,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பவுகள்

(ஊ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு (கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்) - ரூபா 2,000.00

(எ) தீபகற்பங்கள் கொடுப்பனவு (யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மாத்திரம்) - ரூபா 2,400.00

(ஏ) சிகரட் கொடுப்பனவு (செயற்பாட்டு வலயங்களுக்காக) - ரூபா 500.00

(ஐ) விவாகக் கொடுப்பனவு (விவாகமான உத்தியோகத்தர்களுக்காக) - ரூபா 300.00

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி :**

ரூபா 49,550 – 7x540 – 27x670 – ரூபா. 71,420.00 (RS 01-2025) 10/2025 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கையின் படி இச்சம்பளம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ் உத்தியோகத்தர்கள் 2022.12.15 ஆம் திகதிய CRTM 260, RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

(அ) அடிப்படைச் சம்பளம் (2026- 46922.00) - ரூபா 49,550.00

(ஆ) வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூபா 17,800.00

(இ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஈ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1250.00 - ரூபா 12,151.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு
- ரூபா 28,800.00

பயிற்சியின் பின் வழங்கப்படும் கொடுப்பவுகள்

(ஊ) ஊக்குவிப்பு கொடுப்பனவு
(கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்)
- ரூபா 1,500.00

(எ) கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு
(கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்)
- ரூபா 2,000.00

(ஏ) அடிப்படைச் சம்பளத்தில் 25%
(கடமையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்)
- ரூபா 12,387.50

(ஐ) முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு
(முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு பாடநெறியை கற்றதன் பின்) - ரூபா 800.00

(ஒ) குளிர் கொடுப்பனவு 8%
(உரிமையுள்ள முகாம்களுக்கு மாத்திரம்)
- ரூபா 3,964.00

(ஓ) தீபகற்ப கொடுப்பனவு
(யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மாத்திரம்)
- ரூபா 2,400.00

(ஔ) சிகரட் கொடுப்பனவு (நடவடிக்கை வலயங்களுக் காக) - ரூபா 500.00

(ஃ) விவாகக் கொடுப்பனவு (விவாகமான உத்தியோகத் தர்களுக்காக) - ரூபா 300.00

**இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, பொலிஸ் கான்ஸ் டபிள் சாரதி பதவி/ விசேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவி**

(அ) போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளில் கூட சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)

(இ) சீருடை

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரச பல்கலைக்கழகங்கள், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

(உ) உத்தியோகத்தர்களது விளையாட்டுத் திறன் மற்றும் இயல்பிலேயே காணப்படுகின்ற திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள்.

(ஊ) கடமை நிமித்தமான பிரயாணச் செலவுகளும், கஷ்டப் பிரதேசச் சேவைகள் மற்றும் சிறந்த கடமை நிமித்தம் வழங்கப்படுகின்ற வெகுமதிகள் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து நிதிகளும் வழங்கப்படும்.

04. **தகைமைகள் :**

4.1 **வயதெல்லை :**

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 – 24 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள் :**

விண்ணப்பதாரி க.பொ.த. (சா./த.) பரீட்சையில் போதனா மொழி மற்றும் கணிதப்பாடம் உட்பட இருதடவைகளுக்கு மேற்படாதவாறு 02 பாடங் களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி யெய்தியிருத்தல் வேண்டும்

குறிப்பு 01 இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி, பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும், பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும் கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தி யெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

குறிப்பு 02 க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தொழில் நுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சை யில் சித்தியெய்தாது, அப்பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தி யெய்தியிருப்பின், அப்பாடத்தில் சித்தி அடையவில்லை என்றே கருதப்படும்.

4.3 **தொழில்வாண்மை தகைமைகள்:**

இலகுரக அல்லது கனரக வாகனங்களை ஓட்டு வதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றிருத்தல்

குறிப்பு 01 மோட்டார் இயந்திரவியல் தொடர்பான அறிவு அல்லது மோட்டார் வாகன பழுதுபார்த்தல் தொடர்பான அனுபவம் அல்லது வாகனம் ஓட்டுவதில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4.4 **உடற் தகைமைகள்:**

* உயரம் 5 அடி 02 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (சென்றிமீட்டர் 157.48)
* மார்புச்சுற்றளவு 30 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். சென்றிமீட்டர் 76 (குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

4.4.1 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.4.2 மூக்குக்கண்ணாடி அல்லது தொடு வில்லைகள் இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தபட்ச பார்வைத் திறன் 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும்போது மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.4.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருத்தமற்ற விதத்திலும் கடமைக்குப் பங்கம் ஏற்படும் விதத்திலும் செயற்கை முறையில் உடம்பில் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது

4.5 **ஏனைய தகைமைகள் :**

4.5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
4.5.2 விண்ணப்பதாரி கெட்ட நடத்தையுடையவரல்லாமல், சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
4.5.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாது பிள்ளைகள் இருப்பவர்கள் திருமணமாகாதவர்களாக கருதப்பட மாட்டார்கள்.)
4.5.4 தீவின் எப்பாகத்திலேனும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.
4.5.5 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான 4:1 மற்றும் 4:2 பந்திகளில் காட்டப்படுகின்ற தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், பந்தி 4:4 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற திகதியில் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

05. **ஆரம்பப் பரீட்சை :**

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் அடிப்படைத் தகைமைகளையும், வயதெல்லையையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆரம்பப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையின் போது மேற்குறித்த பந்தி 4.1, 4.2 மற்றும் 4.4 இல் விபரிக்கப்பட்டுள்ள (4:4:1 மற்றும் 4:4:2 தவிர) தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படுகின்ற சபையினால் நடாத்தப்படும் உடற்றகுதித்திறன் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் தோற்றும் வேளையில், அதற்கு முகம்கொடுக்கத் தகுதியானவரென அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தை, இலங்கை வைத்திய சபையில் பதிவுபெற்ற வைத்தியரொருவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆரம்பப் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து விண்ணப்பதாரிகளும் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் உட்படுத்தப்படுவார்கள் என்பதுடன், அதன் போது 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களுக்குள் ஓடி முடித்தல் உடற்றகுதிப் பரிசோதனையில் சித்தியடைந்ததாக கருதப்படும்.

குறிப்பு : 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களுக்குள் ஓடி முடிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் உடற்றகுதிப் பரிசோதனையில் சித்தியடையாதவர்களாக கருதப்படுவார்கள்.

06. **தொழில்வாண்மை பரீட்சை :**

ஆரம்பப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் தொழில்வாண்மை பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழில்வாண்மை பரீட்சையானது பின்வரும் விடயங்களின் கீழ் நடாத்தப்படும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* | |
|---|---|---|---|
| எழுத்துப் பரீட்சை | 40 | 20 | 50% |
| செயன்முறைப் பரீட்சை | 60 | 30 | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

ஆரம்பப் பரீட்சையிலும் தொழில்வாண்மை பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிகக் கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதாகாது |
| தொழில்நுட்ப அறிவு/ மொழி ஆற்றல்/ கணனி ஆற்றல்/ ஏனையவை | 20 | |
| விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| தலைமைத்துவம் / சனசமூக சேவைகள் | 20 | |
| நேர்முகப் பரீட்சை சபையில் காட்டும் திறன் | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

தொழில்வாண்மை பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும், பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளைக் கூட்டி, விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை இறங்கு வரிசைப்படி பட்டியலிட்டு பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகளின் ஒழுங்கு வரிசைக்கு அமைய வெற்றிடங்கள் எண்ணிக்கையைப் போன்று 125% விண்ணப்பதாரிகள் பின்புலப் பரீட்சைக்கும் மருத்துவப் பரிசோதனைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும்.

குறிப்பு : மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் சிறப்பான விளையாட்டுத் திறமையினைக் கொண்டுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான திறமையினை அல்லது தேர்ச்சியை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்புச்சுற்றளவு சம்பந்தமான தகைமையைக் கவனத்திற்கொள்ளாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் நியமன அதிகாரியின் தற்றுணிபின் படி ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.

09. **பின்புலப் பரீட்சை :**

9.1 மேற் குறித்த 08 ஆம் பந்திக்கமைவாக ஆட்சேர்ப்பு செய்யத் தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் நடத்தை சம்பந்தமாக அறிந்துகொள்ளும் பொருட்டு பின்புலப் பரீட்சை நடாத்தப்படும்.

9.2 இதன் போது விண்ணப்பதாரியின் நடத்தை சம்பந்தமாக அறிந்துகொள்ளும் பொருட்டு, விண்ணப்பதாரியினதும் அவருடைய நெருங்கிய உறவினர்களினதும், அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நடத்தை மற்றும் அவர்கள் எப்படியானவர்கள் என்பது சம்பந்தமாக பரீட்சிக்கப்படுவதோடு மோசமான பின்னணி அறிக்கைகளையுடைய விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதானது, அவரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதியிழக்கச் செய்யும். பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டமை ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியமனம் இரத்து செய்யப்படும் அல்லது சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

குறிப்பு : நடைமுறை விதிகளின் 59 ஆம் பிரிவிலும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை 7:2:4:5:2 ஆம் பிரிவிலும் பொலிஸ்மா அதிபரின் 2014/ 2007 ஆம் சுற்றறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டு பொலிஸ் சேவையில் இணைந்துள்ளதாக தெரியவந்தால் உங்களது நியமனத்தை இரத்து செய்வது சம்பந்தமாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உடன்படுதல் வேண்டும்.

10. **மருத்துவப் பரிசோதனை :**

பாதகமான பின்புல அறிக்கை இல்லாத விண்ணப்ப தாரிகள் மட்டுமே மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரிகள் பொலிஸ் வைத்தியசாலையில் பிரதான மருத்துவர் உட்பட மருத்துவ சபையினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். இதன்போது, விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானவர்கள் என்பதற்கு உடல் மற்றும் உளத் தகுதிகளை பரீட்சிப்பதற்காகவும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனைக்கு ஒரு தடவை மட்டுமே உட்படுத்தப்பட முடியும். மருத்துவப் பரிசோதனை சுகாதாரம் 169 படிவத்திற்கமைவாக நடாத்தப்படும். பொலிஸ் மருத்துவ சபையினால் நிராகரிக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி :**

11.1 மேற்கண்ட அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தி யடையும் விண்ணப்பதாரிகள் மட்டும், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பொலிஸ்மா அதிபரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு திகதியில் பயிற்சிக்காக அழைக்கப்படுவார்கள். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படுவதோடு அதற்குப் பின்னர் பயிலுனர் காலம் முடியும் வரை உரிய வெளிக்களப் பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனத்தை இரத்துச் செய்தல் என்பன தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை :**

நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். (ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்)

13. **சேவை நிபந்தனைகள் :**

13.1 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கீழ்க் காணும் 13:3 ஆம் பிரிவிற்கு உட்பட்டு மூன்று (03) வருடகால பயிலுனர் சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்யும் வகையில், தற்போது அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

13.3 அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு சுற்றறிக்கைகள், தாபன விதிக் கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக் கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ் மாஅதிபரின் சுற்றறிக்கைகள், பொலிஸ் அறி வுறுத்தல் கோவையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

13.4 பயிலுனர் காலப்பகுதி, நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலம் வரை வலுவில் இருக்கும். பயிலுனர் காலப்பகுதியில் உத்தியோகத்தரொருவருக்கு திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பொலிஸ் மாஅதிபரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி மட்டுமே திருமணம் முடிப்பதற்கு முடியும் என்பதுடன் இவ் விதிமுறை மீறப்படின் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், பயிற்சியை முடித்த பின் 05 வருட காலம் கட்டாயமாக சேவையில் ஈடுபடுதல் வேண்டும். இக்கட்டாய சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் உத்தியோகத்தர் ஒருவர் சேவையிலிருந்து பதவி விலகுவதற்கு கருதுவாராயின் அவரின் பயிற்சி, சீருடை மற்றும் ஏனைய செலவினங்களுக்காக விதிக்கப்பட்ட சகல பணத்தையும் பதவி விலகும் கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்கும்போதே செலுத்துவதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றிற்கு வருதல் வேண்டும். சேவையிலிருந்து பதவி விலகுவது தொடர்பாக தாபன விதிக் கோவை/ அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதன் முதலாக பணிக்கமர்த்தப்பட்ட போது, தமக்குச் சொந்தமாகவுள்ள தனக்கே உரித்துடைய அல்லது தமது பெயரில் எழுதப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட எல்லா சொத்துக்கள் / ஆதனங்கள் சம்பந்தமாகவும் தாம் பொறுப்பாக வுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமாகவும் உரிய விபரங் களை தமது தனிப்பட்ட கோவையில் உட்சேர்க்கும் பொருட்டு (திருத்தப்பட்ட) 261 ஆம் இலக்க பொதுப்படிவத்தில் உட்சேர்த்து பொலிஸ் மாஅதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்குறிப்பிட்ட விபரங்களை வாழ்கைத்துணை தொடர்பிலும் உட்சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்ட வகையில் புதிய உரித்தொன்று அல்லது சொத்தொன்று அல்லது எடுத்துக்கொள்ளப்பட்டால், அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்ட உரித்து அல்லது சொத்து தொடர்பான முழு விபரங்களை தமது தனிப்பட்ட கோவையில் உட்சேர்ப்பதற்காக சகல உத்தியோகத்தர்களினாலும் எழுத்து மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்க வேண்டும்.

13.7 பயிலுனர் பொலிஸ் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி இலங்கை பொலிஸ் கல்லூரியில் பயிற்சிகளை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் செயற்படுவதாக சத்திய பிரமாணம் செய்தல் வேண்டும்.

14. **பதவியில் நிரந்தரமாக்கல் :**

14.1 தகுதிகாண் காலப்பகுதியில், மாதாந்தம் பேணிச் செல்லப்படுகின்ற முன்னேற்ற கோப்பொன்று 33 மாத காலம் பேணிச்செல்லப்படுதல் வேண்டும். தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில், அந்த உத்தியோகத்தர்களின் சேவை நியமன அதிகாரியினால் நிரந்தரமாக்கப்படும்.

14.2 மேலும் தகுதிகாண் காலப்பகுதியில் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு, நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு நியமன அதிகாரியினால் சேவை நிரந்தரமாக்கப்படும்.

எவ்வாறாயினும் மேலதிக 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குதல் அல்லது தகுதிகாண் காலத்தை நீடித்தல் சம்பந்தமாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டாலொழிய நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை

| *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை. எழுத்து பரீட்சை / தொழிற்றுறை பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையில் நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து மற்றும் செயன்முறை |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் சாரதி பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்துவதற்கான பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் சாரதி பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்துவதற்கான பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் |
| 4 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | உப பொலிஸ் பரிசோதகர் (போக்குவரத்து) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்துவதற்கான பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் |

16. **மொழித்தேர்ச்சி :**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| அரசகரும மொழி | ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித்திறனை பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

17. இவ்வர்த்தமானிப் பத்திரத்தில் பகுதி I இன் பந்தி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பாக ஏற்புடைய பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

18. (அ) ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள், அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென அத்தாட்சிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

19. இவ் அறிவித்தலில் காட்டப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லா வகையிலும் உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

குறிப்பு - பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவு அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மாஅதிபர்.

03-1150/3

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் -2026

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவியில் நிலவுகின்ற 01 வெற்றிடத்திற்கு பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின்படி தகைமகளைப் பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் “நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்'' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோருவதற்கான இறுதித் திகதி 2026.04.26 அன்று ஆகும்.

குறிப்பு I : விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப் பட மாட்டாது. இறுதித்தினம் வரை விண்ணப் பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டங்கள் விண்ணப்பதார் களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின்படி அதிக புள்ளி களைப் பெறுபவர் வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப் படும்.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது நியமனதாரர் பதவி ஏற்கும் திகதி ஆகிய இரண்டில் பிந்தைய திகதியாகும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி/தொழில்சார் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டப் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப் பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படு கின்ற சட்டப் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக் கப்பட்ட சட்டப்பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம்:**

உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்ததன் பிறகு சட்டத்தரணி ஒருவராக மூன்று வருடங்களுக்குக் (03) குறையாத முனைப்பான தொழில்சரர் அனுபவத்தைக் கொண்டிருத்தல். (முனைப்பான தொழில்சார் அனுபவத்தை உறுதி செய்வதற்காக சமர்பிக்கும் ஆவணங்களில் அனுபவம் பெற்ற காலம், உறுதிப் படுத்துபவரின் உத்தியோகபூர்வ பதவி முத்திரை மற்றும் சான்றுப்படுத்திய திகதி ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு II** : அடிப்படை தகுதியை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் விண்ணப்பதாரராலேயே சான்றுப்படுத்தி பிரதிகள் விண்ணப்பப்படிவத்திற்கு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக்காலம் ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

(iii) **உடற்தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்த வொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **வேறு தகைமைகள் :**

- விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம் சிறந்த முறையில் பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதியில் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு அவசியமான சகல தகைமைகளையும் அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித் துடையதுமாகும். தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களித்தல் வேண்டும். உரித்தான ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் அவ்வப்போது அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்படும் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப்பதவியானது மூன்று (03) வருட காலத்திற்கு தகுதிகூர் நிலைக்கு உட்பட்டது. அம்மூன்று (03) வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சுற்றறிக்கைகளின்படி இந்த பதவிக்கு நியமானமாகி ஐந்து வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர், சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக பிற அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியை பெற வேண்டியதுடன், அரசகரும மொழி அல்லாத மொழியில் சேவையில் இணைந்த அதிகாரிகளால் தகுதிகூர் காலத்திலேயே உரிய அரசகரும மொழிகளுக்கான தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(v) இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குமுறைகளுக்கும், திணைக் களம்சார் பிற கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(vi) விண்ணப்பிக்கப்படுகின்ற மொழி பின்னர் மாற்றப் படமாட்டாது. நீங்கள் நியமனம் பெற தகுதி வாய்ந்த மொழி மூலமானது உங்களால் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலமாகும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு 21 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை தொடர்புடையதன்று.

5. **சம்பள அளவுத்திட்டம்:**

இப்பதவிக்குரிய (மாத) சம்பள அளவுத்திட்டமானது 10/2025 ஆம் இலக்க மற்றும் 2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றிக்கை எற்பாடுகளின்படி (SL-1-2025) ரூபா 82150-10x2,400-8x12,940-17x3,900- ரூபா 195,970.00 உரித்தானதாகும்.

6. கட்டமைப்புசார் நேர்முகப்பரிட்சைக்கு பின்வரும் புள்ளிகள் வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

<table>
<tr><th>தொடர் இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகபட்ச புள்ளிகள்</th></tr>
<tr><td>01</td><td>மேலதிக கல்வித் தகைமைகள் :<br>01/2025 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும்.<br>• முதலாம் வகுப்புச் சித்தியுடனான சட்டப் பட்டம்<br>• இரண்டாம் வகுப்பின் உயர்சித்தியுடன் சட்டப் பட்டம்<br>• இரண்டாம் வகுப்பின் கீழ் சித்தியுடன் சட்டப் பட்டம்<br>• பொதுச் சித்தியுடனான சட்டப் பட்டம்<br>அல்லது<br>• சட்டக் கல்லூரியின் இறுதி வருடத்தின் முதலாம் வகுப்புச் சித்தி<br>• சட்டக்கல்லூரியின் இறுதி வருடத்தின் இரண்டாம் வகுப்புச் சித்தி</td><td><br><br><br>20<br>15<br>12<br>10<br><br>15<br>10</td><td>20</td></tr>
<tr><td></td><td>மேலதிக தொழில்சார் தகைமைகள் :<br>(அ) 01/2025 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளின்படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம்<br>(ஆ) 01/2025 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்படி அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் சட்டம் தொடர்பான முதுகலை பட்ட டிப்ளோமா ஒன்றை அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தினால் பெற்ற சட்ட முதுகலை டிப்ளோமா</td><td><br>15<br><br>10</td><td>15</td></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவங்கள் :<br>வழக்குகளுடன் தொடர்பான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தல்.<br>
<table>
<tr><th></th><th>வழக்குத் தாக்கலிடல்</th><th>நீதிமன்றத்தின் முன் ஆஜராக வாக்குமூலம் அளித்தலுக்கான புள்ளி (ஒரு வழக்கிற்காக)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாயசபை</td><td>2</td><td>3</td></tr>
</table>
<br>குறிப்பு:<br>மேற்படி தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு குறித்த வழக்குகளின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு இடம்பெற்ற வழக்கறிக்கையுடன் பிரதியொன்று நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்பித்தல் வேண்டும்.</td><td></td><td>30</td></tr>
</table>

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | **கணினித்திறன் :** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்திற்கு தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தை பிரதான பாடமாக கற்றிருத்தல் | 15 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட தொழில்சார நிறுவனம் ஒன்றினால் பெற்ற தகவல் மற்றும் தொடர்பாடல் சட்டம் பற்றிய டிப்ளோமா | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழிநுட்பம் பற்றிய டிப்ளோமா அல்லது வேறு நிறுவனம் ஒன்றினால் பெற்றுக்கொண்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட உயர் மட்ட டிப்ளோமா | 10 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட அல்லது இலங்கை சட்டக்கல்லூரி அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்சார் நிறுவனமொன்றினால் மற்றும் தொடர்பாடல் துறையில் தகவல் பாடநெறிகளை மேற்கொண்டு/ பயிற்சி திட்டங்களில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்) | 04 | |
| 04 | **ஆங்கிலமொழி தேர்ச்சி :** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்கு பிரதான பாடமாக உள்ளடக்கியதாக பெற்ற பட்டம் | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்ட நீதிமன்ற மாதிரிப் போட்டிகளில் (Moot court competitions) குறிப்பிடப் பட்டுள்ள ஆங்கிலமொழியின் வெளிப்பாடு<br>தனியாள்<br>i. முதலாம்/ சிறந்த திறன் 12<br>ii. இரண்டாம் இடம் 10<br>iii. மூன்றாம் இடம்/வேறு திறன்கள் - 10<br>குழுக்கள்<br>i. முதலாம் இடம்/ சிறந்த திறன் - 10<br>ii. இரண்டாம் இடம் - 08<br>iii. மூன்றாம் இடம்/ வேறு திறன்கள் - 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா ஒன்று அல்லது வேறு நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட SLQF 3 அல்லது அதற்கு உயர் மட்ட டிப்ளோமா அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றினால்/ அரசாங்கத்தினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது 1500 மணித்தியால கற்றல் பாடநெறியொன்றினை மேற்கொண்டு பெறப்பட்ட டிப்ளோமா. | 10 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (ஈ) கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இங்கிலாந்து) ஆங்கிலமொழிக்கு குறைந்த பட்சம் அதி திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழிக்கு IELTS மொத்தப்புள்ளி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL – IBT 79 அல்லது அதற்கு மேல் TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேல் TOEFL – PBT 550 அல்லது அதற்கு மேற்படல்.<br><br>(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட உயர் சான்றிதழ் பத்திரம் அல்லது வேறு நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட SLQF-2 மட்ட சான்றிதழொன்று | 08<br><br>05 | |
| 05 | **நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறன்கள் :**<br>பதவியின் பங்கினை நிறைவேற்றவுள்ள விண்ணப்பதாரர்களின்:<br>○ வலிமைகள் (Strength questions) (01 புள்ளி )<br>○ சந்தர்ப்பத்திற்கேற்ப முடிவெடுக்கும் திறன் (Situational questions) (02 புள்ளிகள் )<br>○ திறமை (Competency questions) (02 புள்ளிகள்) | | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | | | **100** |

**குறிப்பு**: மேலே புள்ளிகள் வழங்கல் நடைமுறையின் மேலதிக அனுபவம் தவிர்ந்த வேறு ஒவ்வொரு தலைப்பின் கீழ் உயர்ந்தபட்ச தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.

7. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
நேர்முகப்பரீட்சையில் அனைத்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகளின் பிரதிகள் விண்ணப்பதாரர்களாலேயே உரிய வகையில் உறுதிப்படுத்தப்பட்டு (பிரதி வீதம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

i. ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படுகின்ற செல்லுபடியாகின்ற ஆளடையாள அட்டை.
ii. செல்லுபடியாகின்ற கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம் :**

(i) விண்ணப்பங்கள் 2026.04.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் “செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு, இல.19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10” எனும் முகவரிக்கு கிடைக்குமுகமாக பதிவுத்தபாலில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தினத்தின் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதலாம் பக்கமானது இலக்க 01 தொடக்கம் 13 வரையிலும் இரண்டாவது பக்கமானது 14 ஆம் பக்கம் தொடக்கம் 16 ஆம் பக்கம் வரையிலும் மூன்றாவது பக்கமானது விண்ணப்பதாரரின் சான்றுப்படுத்தல், விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தலும் உள்ள வகையில் தயாரித்து தமது கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் “நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்” எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான் ஒருவர்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர்/ சட்டத்தரணி ஒருவர்/ பகிரங்க நொத்தாரிசு ஒருவர்/ முப்படையில் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவர் அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதச் சம்பளம் பெறும் அதிகாரி ஒருவரால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அதிகாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தான் சேவை புரியும் திணைக்களத்தின் தலைவரினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

(vi) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதம் அடைதல் பற்றி எந்த முறைப்பாடும் ஏற்றுக்கொள்ப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மையற்றது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன் கண்டறியப்பட்டால் உங்களது அபேட்சகர் நிலை இரத்துச் செய்யப்படும் அவ்வாறான உண்மையற்ற அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர், கண்டறியப்பட்டால் அது குறித்த நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு பணிநீக்கம் செய்யப்படும்.

10. அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்களை நிரப்புவது அல்லது இந்த ஒழுங்குமுறையில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை எடுப்பது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், அப்போது சிங்கள மொழியிலான உரையே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பாக ஏதேனும் பிணக்கு அல்லது ஆட்சேர்ப்பு செயன்முறையின் போது ஏதேனும் சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஏற்பட்டால் அதுதொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் முடிவு இறுதி முடிவாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.

2026, மார்ச்சு 13.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

| இல. ................................... (அலுவலக உபயோகத்திற்கு) |
|---|

(விண்ணப்பிக்கும் மொழிமூலத்திற்குரிய இலக்கத்தை கூண்டில் குறிப்பிடுக)

சிங்களம் - 2 / தமிழ் - 3 / ஆங்கிலம் - 4 [ ]

**குறிப்பு** : விண்ணப்பம் சமர்ப்பிக்கும் மொழிமூலத்தை மாற்றம் செய்ய முடியாது.

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) : ........................................................................................................
..............................................................................................................................................
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :.........................................................................................
..............................................................................................................................................

(ஆ) முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) :........................................................................................................
..............................................................................................................................................
முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ........................................................................................................
..............................................................................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) : ..............................................................................................................
..............................................................................................................................................
03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ..........................................................................................
..............................................................................................................................................
04. தொலைபேசி இலக்கம் : ..............................................................................................................
05. மின்னஞ்சல் முகவரி :..............................................................................................................
06. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..............................................................................................
07. பால் :..............................................................................................................................
08. பிறந்த திகதி : ஆண்டு :.............................. மாதம் : ...................................................... திகதி :.....................................
09. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது: வருடங்கள் :............................ மாதங்கள் :......................
நாட்கள் :......................
10. இனம் : ..........................................
11. திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது : ..........................................................................
12. சட்டப் பட்டம் பற்றிய விபரம் :
பல்கலைக்கழகம் : ....................................................................................
பட்டம் வழங்கப்பட்ட திகதி : ..............................................................................................
மொழிமூலம் :............................................................................
13. சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதி :............................................
14. சட்டத்தரணியாக தொழில் அனுபவம் : ஆண்டுகளின் எண்ணிக்கை.........................................
15. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 06 ஆம் பந்திக்கு அமைய தகைமைகள் :

i. ......................................................................................................
ii. ......................................................................................................
iii. ......................................................................................................
iv. ......................................................................................................
v. ......................................................................................................
vi. ......................................................................................................
vii. ......................................................................................................
viii. ......................................................................................................
ix. ......................................................................................................
x. ......................................................................................................
xi. ......................................................................................................
xii. ......................................................................................................
xiii. ......................................................................................................
xiv. ......................................................................................................
xv. ......................................................................................................
xvi. ......................................................................................................
xvii. ......................................................................................................
xviii. ......................................................................................................
xix. ......................................................................................................
xx. ......................................................................................................

16. மொழித் தேர்ச்சி : (உரியநிரலில் ✓ அடையாளக் குறியிடுக.)

| | *மிகநன்று* | *நன்று* | *சாதாரணம்* | *பலவீனம்* |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

.................................................................................. ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையிலான மாற்றுவழி முறையாக வினைத்திறனின்மையின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி வெறிதாக்கிய ஒருவராகக் கருதப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடங்கும் விடயங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை என்பது அல்லது தவறானது என்பது என்னைத் தெரிவுசெய்துகொள்ளமுன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும், தெரிவுசெய்யப்பட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது தொழிலில் இருந்து நீக்கம் செய்யப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :.........................................

.........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல்**

இந்த விண்ணப்பத்தினை சமர்பிக்கின்ற திரு. /திருமதி/ செல்வி ………………………………………………………….. என்பவரை தனிப்பட்ட வகையில் நான் அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் எனவும் சான்று படுத்துகின்றேன்.

................................................................
கையொப்பத்தினை சான்றுபடுத்திய அதிகாரியின் கையொப்பம்

பெயர் :...................................................
முகவரி :..................................................
திகதி :.............................................

**அரசாங்க சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்குரிய திணைக்களத் தலைவரின் சான்றுபடுத்தல்**

திரு./திருமதி/செல்வி………………...............................……………….........................……………………. என்பவர் தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில்…………………......…………………………… ஆக நிரந்தர/ தற்காலிக/அமய அலுவலராக சேவையாற்றிவருகின்றார் என்றும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்கமுடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

திகதி :...............................................
பெயர் : ..................................................
பதவி : .................................................
அமைச்சு/திணைக்களம் :.......................................................

03-1095

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் வகுதி 2 கள /அலுவலக உத்தியோகத்தர்கள் சேவைப் பிரிவின் தரம் II நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் வகுதி 2 கள / அலுவலக உத்தியோகத்தர்கள் சேவைப் பிரிவின் தரம் II நன்னடத்தை உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் வெற்றிடத்தை (01) நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் காணப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளருக்கு தத்துவம் உள்ளது.

விண்ணப்பப்படிவமானது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.donets.lk எனும் இணையத்தளத்தின் “Our Services” இன் கீழ் காணப்படும் “Online Application – Recruitment Exam/ E. B. Exam இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (Online) மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ் நிலை விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் செயன் முறையானது 2026, மாச்சு மாதம் 30 ஆந் திகதி மு.ப.09.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்பதுடன், இது 2026, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி பி.ப.09.00 மணிக்கு நிறைவடையும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது பிரத்தியேக ஆவணக்கோப்பில் இடுவதற்காக நிறுவனத்தின் தலைவருக்கு கையளித்தல் வேண்டுமென்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும்போது நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதனை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் அசௌகரியங்களையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

1.0 **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று இப்பதவிக்காக கோரப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

1.1 **பொதுவான தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
II. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையினைக் கொண்டிருத்தல் வேண்டும்
III. ஏதேனும் மதத்தை / மதப் பிரிவைச் சேர்ந்த மதகுருமார் (துறவிகள்) எவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.
IV. விண்ணப்பதாரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் V வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வித தகுதியீனங்களாலும் பாதிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

1.2 **உடல் உள ஆரோக்கியம் :**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.3 **வயது எல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அதன்படி, 2008.04.27 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னராகவும், 1991.04.27 ஆந் திகதிக்குப் பின்னராகவும் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள்.

(உதாரணம்: 31.03.2025 அன்று வயது 18 ஆண்டுகளுக்கு குறையாமல் மற்றும் 35 ஆண்டுகளை மேற்படாமல் இருக்க வேண்டும் எனின், 31.03.2007 அன்று அல்லது அதற்கு முன்பும் மற்றும் 31.03.1990 அன்று அல்லது அதற்கு பின்னரும் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.)

1.4 **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

சமூகவியல் / உளவியல் / குற்றவியல் ஆகிய பாடங்களில் ஒன்றையாவது அல்லது சிலவற்றையாவது உள்ளடக்கி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

1.4.1. **தொழிற் தகைமை :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் சமூகப்பணி /

உளவள ஆலோசனை / மனித உரிமைகள் ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய 06 மாதங் களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப் பணி / உளவள ஆலோசனை / மனித உரிமைகள் ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய 06 மாதங் களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

1.4.2 **அனுபவம்** : ஏற்புடையதாகாது.

**2.0 ஆட்சேர்ப்பு நடைமுறை :**

2.1 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் வகுதி 2 கள / அலுவலக உத்தியோகத்தர்கள் சேவைப் பிரிவின் தரம் II நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்காக, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் தகுதிகள் மற்றும் சான்றிதழ்களைச் சரிபார்ப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் முடிவுகளின் அடிப்படையில் தகுதியான விண்ணப்பதாரி ஒருவர் ஆட்சேர்க்கப்படுவார்.

2.2 **எழுத்துமூல பரீட்சைக்கான பாடங்கள் :**

பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரமே நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்று வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

| *பரீட்சை வினாத் தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| சமூக அபிவிருத்தி, சமூகப் பணி மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் (இலங்கை தொடர்பில் ) | 1 ½ மணித் தியாலம் | 100 | 40% |
| 2. சம்பவக் கற்கை | 1 ½ மணித் தியாலம் | 100 | 40% |

**2.3 எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *பரீட்சை வினாத்தாள்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. சமூக அபிவிருத்தி, சமூகப் பணிகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு ( இலங்கை தொடர்பில் ) | சிறுவர் உரிமைகள், தண்டனைச் சட்டக் கோவை |
| 2. சம்பவக் கற்கை | சிறுவர்கள் தொடர்பான விடயப்பரப்பிலிருந்து வழங்கப்படும் பிரச்சினை யொன்றை ஆய்வு செய்து, சட்ட பூர்வமான மற்றும் சமூக யதார்த்தங்களின் அடிப்படையில் தீர்வுகளை முன்மொழிதல். |

**3.0 மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :**

10/2025ஆம் இலக்க மற்றும் 2025.03.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை 1 இன் பிரகாரம், இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 58,660.00 – 10 x 1,190-11 x 1,360-15x 1,670-110,570.00 (MN 5 – 2025)ஆகும்.

**4.0 நியமன நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும். உமக்குரிய ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர் கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் விதத்தில் அதற்கான பங்களிப்பு தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

II. இந்த நியமனம் 03 வருட கால தகுதிகாண் காலத் துக்கு உட்பட்டதாகும். இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதியில் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

III. 18/2020ஆம் இலக்க மற்றும் 2020.10.16 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் இதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு இணங்க சேவையில் இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக, மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத ஒரு மொழியில் சேவையில் இணைந்த

உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்துக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

IV. இந்நியமனமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக் களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் உட் பட்டதாகும்.

V. விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. நீர் நியமனம் பெறுவதற்குத் தகுதி பெறும் மொழி மூலமானது, விண்ணப்பப்படிவத்தில் உம்மால் குறிப்பிடப்படும் மொழி மூலமாகும்.

4.1 **பொறுப்பளிக்கப்படும் விடயப் பொறுப்புகள் :**

**சட்டரீதியான கடமைகள் :**

I. குற்றவாளிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காக நன்னடத்தைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்படும் கடமைகள்.

II. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் சிறுவர்கள் மற்றும் சட்டத்துடன் முரண்பட்ட சிறுவர்களுக்காக, சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகக் கடமைகளை நிறைவேற்றுதல்.

III. சிறுவர்களுக்கு மாற்றுப் பராமரிப்பினை வழங்கு வதற்காக சிறுவர்களைத் தத்தெடுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் செயற்படுதல் .

IV. அநாதைகள் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குவதற்காக அநாதை இல்லங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடமைகளை ஆற்றுதல்.

V. வீதிச் சிறுவர்கள் மற்றும் அலைந்து திரியும் நபர்கள் தொடர்பாக அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம் மற்றும் தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டத்தின் சட்ட விதிகளுக்கு அமைய கடமைகளை நிறைவேற்றுதல்.

VI. இளம் குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களை சமூகமயப்படுத்தல் தொடர்பாக, இளம் குற்றவாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள கடமைகளை நிறைவேற்றுதல்.

VII. வீட்டு வன்முறைச் சட்டம், கல்விச் சட்டம், சுனாமிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் செயற்படுதல் மற்றும் தண்டப்பணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் கட்டளை களுக்கு அமைவாகச் செயற்படுதல்.

VIII. சிறுவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள், சிறுவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாவலர் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக குறிப்பிட்ட சிறுவனின் பாதுகாவலர் மற்றும் விசாரணை உத்தியோகத்தராக செயற்படுதல்.

**சட்டரீதியற்ற கடமைகள் :**

I. தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க சிறுவர் நலனை முன்னிறுத்திச் செயற்படுதல்.

II. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்திடமிருந்து பொதுமக்கள் எதிர்பார்க்கும் ஆலோசனைகள் மற்றும் சேவை களை வழங்குதல்.

III. விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்துதல்.

IV. சிறுவர்களைத் தத்தெடுத்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப் படுத்துதல் மற்றும் அதன் மேற்பார்வை நடவடிக்கை களை மேற்கொள்ளுதல்.

V. சிறுவர்கள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதில் ஒத்துழைப்பு நல்குதல்.

VI. சிறுவர்களுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்குதல்.

5.0 **விண்ணப்பங்களை முன்வைப்பதற்கான அறிவுரைகள்**

பரீட்சைக்கான நிகழ்நிலை (Online) விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரமே நிரப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் முன் வைக்கப்பட்ட விண்ணப்பமானது திணைக்களத் தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப் படவில்லையா என முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி எண்ணிற்கு குறுஞ் செய்தி மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்படிவத்தைக் பூர்த்தி செய்கையில் இந்த அறிவுறுத்தல்களை

இறுக்கமாகக் கடைப்பிடிக்கவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**6.0 பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் கொடுப்பனவானது நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கட்டண முறைமைகளின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card);
II. இணையத்தளத்தின் ஊடாக செலுத்தும் வசதி களையுடைய எந்தவொரு வங்கி பற்றட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions);
III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை Flex மூலம் (Online Banking Method Flex App of Bank of Ceylon );
IV. எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலம் (Any Bank Branch of the Bank of Ceylon).

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைகள் மூலம் கொடுப்பன வுகளை மேற்கொள்ளும் விதம் பற்றிய அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப் பெற்றமை குறித்து குறுஞ் செய்தி மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத் துக்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தல் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் கோளாருகளுக்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

**7.0 பரீட்சை அனுமதிப் பத்திரத்தை வழங்குதல் :**

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் சரியான விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் நிகழ்நிலை மூலம் மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட உடனே இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் இது குறித்து விண்ணப்பதாரிகளுக்கு இணைத்தளத்தின் ஊடாக / குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தமது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரியாயின் இது குறித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையில் உசாவுதல் வேண்டும். இவ்வாறு உசாவுகையில், விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர், விண்ணபப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பி இது குறித்து உசாவுதல் மிகப் பொருத்தமானதாகும். இவ்வாறு உசாவுகையில் பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படித்தின் பிரதி அல்லது பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் கிடைக்கப்பெற்ற பற்றுச் சீட்டின் பிரதியை தயாராக தம் வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும். அனுமதிப் பத்திரத்தை பரிசீலித்து அதில் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனில் இது குறித்து முன்கூட்டியே பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறி வித்து விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப குறிப்பிட்ட திருத்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களை மேற்கொள்ளுமாறு முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப் படமாட்டாது.

**8.0 விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்று கின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுசீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகம் மற்றும் மின்னியல் தொலைதொடர்பு சாதனங்களை அணிந்திருக்காமையை உறுதி செய்யும் வகையில் இரு காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.மேலும் பரீட்சை மண்டபத்துக்குள் உட்பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

9.0 விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவி தொடர்பில் தகைமைகளை நிறைவு செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருத்தில் கொள்ளப்படக் கூடாது.

10.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்துதல்**

பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்ப தாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை நிறுவன தலைவர் அல்லது அவரால் தத்துவம் கையளிக்கப்பட்ட உத்தி யோத்தர் மூலமும், ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை தமது பிரிவின் கிராம அலுவலர், அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிஸ் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மத நிலையங்களுக்கு பொறுப்பான அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட பதவியை வகிக்கும் மதகுருவினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

11.0 பரீட்சைக்கு தோற்றும் அனைத்து விண்ணப்ப தாரர்களும் பரீட்சையின் முதல் நாளன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை மண்டப பிரதானியிடம் கையளித்தல் வேண்டும்.

12.0 பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். இந்த சட்ட விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

13.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மைகள் இருப்பதாக அவதானிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப் பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆணையாளர்,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்.

2026.03.09.

03-1079

---

## இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் II மற்றும் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை – 2025

1.0 இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் II மற்றும் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2026, யூன் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்குரிய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே குறித்த தடைதாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

2.0 இப்பரீட்சையானது 2024/35 ஆம் இலக்க மற்றும் 2017.06.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 08 ஆம் பந்தி, 03 மற்றும் 04 ஆம் பின்னிணைப்புக்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்படும்.

3.0 மேற்படி சேவையின் ஒவ்வொரு தரத்திற்கும் உரியதாக நடாத்தப்படவுள்ள வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் பின்வருமாறு அமையும் :

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *குறியீட்டுப் பெயர்* |
|---|---|---|
| 01. | இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 | Librarian - II |

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *குறியீட்டுப் பெயர்* |
|---|---|---|
| 02. | இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 | Librarian - III |

4.0 இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டொழுகுதல் வேண்டும். இச் சட்டதிட்டங் களை மீறின் ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப் படும் தண்டனைக்கு அவர்கள் உள்ளாக நேரிடும். விண்ணப்பிக்கும் போது அடிப்படைத் தகவல்களான பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை சரியாக உட்செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம், தவறான தகவல்களை உட்செலுத்துவதினால் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாமை பரீட்சைக்குத் தோற்று வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாமை அல்லது பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படாமை தொடர் பான பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்க வேண்டும் என்பதுவும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சரியாக மற்றும் தெளிவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக 2026.04.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடிய வகையில் ''பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், இல. 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப் பட்டுள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் II மற்றும் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025" எனும் சொற்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மேலும், 2026.04.10 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தபால் தாமதங்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் பொறுப்பேற்க மாட்டாது.

5.1 (i) விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 முதல் 5.0 வரையானவற்றை முதலாம் பக்கத் திலும் ஏனையவற்றை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கியதாக (A4) அளவுத்தாளினை இரு பக்கங்களிலும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை தட்டச்சு செய்து தயாரிக்க முடியும் எனினும், அதனை விண்ணப்பதாரரின் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப் பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றினைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(ii) அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கங் களுக்காக அனைத்து விண்ணப்பதாரர்கள் மூலம் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியிலேயே தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அவை அதே மொழியிலேயே நிரப்பப்படவும் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண் ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

பரீட்சை விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப் பித்தல் 2026.03.27 ஆம் திகதி முதல் 2026.04.10 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மாத்திரமே மேற்கொள்ள முடியும்.

6.0 i. பரீட்சைக் கட்டணங்கள் - முதற்தடவையாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத் தர்கள் மூலம் எவ்வித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இருப் பினும் அதன் பின்னரான தடவைகளில் உத்தி யோகத்தர்களினால் ஒரு பாடத்திற்கு ரூ. 250.00 வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

ii. பரீட்சைக் கட்டணங்கள் பின்வரும் கணக்கில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

கணக்கின் பெயர்: செயலாளர், பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கணக்கு இலக்கம்: 310100119027430
வங்கி: மக்கள் வங்கி - பம்பலப்பிட்டி கிளை

iii. அக் கொடுப்பனவுக்காக வழங்கப்படும் பண வைப்புப் படிவத்தின் இலக்கமானது விண்ணப் பப்படிவத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதுடன், பண வைப்புப் படிவத்தின் மூலப் பிரதியானது விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படல் வேண்டும்.

iv. மேலும், கணக்கில் பணத்தினைச் செலுத்தும் போது பணத்தைச் செலுத்துபவராக விண்ணப்ப தாரியின் பெயரையும், விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், பணம் வைப்பிலிடுவதற்கான காரணம் எனும் இடத்தில் தங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் உள்ளடக்கி பண வைப்புப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். நிகழ்நிலை (Online) ஊடாகப் பணத்தைச் செலுத்தும் உத்தியோகத்தர்களும் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டில் மேற்படி தகவல்களைக் குறிப்பிடல் வேண்டும்.

(பரீட்சைகளின் குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்)

7.0 விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பதாரியைத் தொடர்பு கொள்ளும் வழி களான கைத்தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை பரீட்சை நட வடிக்கைகள் நிறைவடையும் வரை செயலில் வைத்திருப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அக்கைத் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை மாற்றுவதன் காரணமாக ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பான பொறுப்பினையும் விண்ணப்பதாரர்களுக்கு உரித்தாகும் என கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

8.0 தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப் படிவங்களுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். (பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பான அறிவித்தல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.slida.lk) பிரசுரிக்கப்படும்). அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு மூன்று நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைக் கிளையின் தொலைபேசி இலக்கங்களான 011-5980252 அல்லது 011-5980236 ஊடாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை வினவ முடியும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். அவ்வாறு வினவும் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காகத் தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய தற்கான பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைத் தபாலில் அனுப்பிய போது பெற்றுக் கொண்ட பதிவு செய்யப்பட்ட தபால் பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

9.0 விண்ணப்பதாரியின் அபேட்சகத்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியமேற்படின், 011-5980263 அல்லது 011-5980264 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அதனை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்று வதற்காக எவ்வித பயணக் கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

10.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :** பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு ;

iii. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றினை சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரர்களின் அபேட்சகத்தன்மையானது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்துணிவின் பிரகாரம் இரத்து செய்யப்படலாம்.

11.0 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் உரிய சேவைக்குள் உள்வாங்கப்படுவதற்காக நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு முடியும். போட்டிப்பரீட்சையின்றி சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களும் தாம் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 உத்தியோகத்தர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றுவதற்கு முடியும். எனினும் ஒவ்வொரு பாடத்துக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தையாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

13.0 பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வெளியிடப்பட்டதன் பின்னர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அப்பெறுபேறுகள் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அப் பெறுபேறுகளின் பிரகாரம் உரிய திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14.0 பரீட்சை நடைமுறை: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கும் தோற்றக்கூடிய உத்தியோகத்தர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத் திட்டங்கள் பின்வருமாறு அமையும்.

14.1 இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

14.1.1 தகைமைகள் - இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

இப்பரீட்சையானது தரம் II இற்கு தரமுயர்த்தப் பட்டு 03 வருடங்களுக்குள் சித்தியடைதல் வேண்டும்.

14.1.2 பரீட்சை நடைமுறை –இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

**பாட இலக்கம் (01) – பொது நிர்வாகமும் நிதி முறைமைகளும் - 3 மணித்தியாலங்கள் (100 புள்ளிகள்)**

**பகுதி I – பொது நிர்வாகம் – நேரம் 1½ மணித்தியாலங்கள் – (50 புள்ளிகள்)**

(அ) இலங்கை அரசியலமைப்பு பற்றிய அடிப்படை அறிவு

(ஆ) தாபன விதிக்கோவையின் VI இருந்து VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

(இ) 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க அரச ஆவணக்காப்பகச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய ஆவணக்காப்பக (திருத்தச்) சட்டம்.

(ஈ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பாகம்.

(உ) 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்.

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க அறிவுசார் சொத்துச் சட்டம்.

* **பகுதி II – நிதி முறைமைகள் – நேரம் 1½ மணித்தியாலங்கள் – (50 புள்ளிகள்)**

(எ) நிதிப் பிரமாணம் - நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகள்

**பாட இலக்கம் (02) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் – (100 புள்ளிகள்)**

(அ) நூலகக் கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள்

(ஆ) அரச வெளியீடுகளின் பயன்பாடுகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும்

(இ) நூலகத் துறையிலான பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்கள்

(ஈ) நூலக முகாமைத்துவ உபாயமார்க்கங்கள்

(உ) நிதி முகாமைத்துவம்

(ஊ) நேர முகாமைத்துவம்

(எ) மனித வள முகாமைத்துவம்

(ஏ) இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பச் செயற்பாடுகள்

(ஐ) நூலகக் கணினிமயப்படுத்தல் தொகுதிகள் மற்றும் வலையமைப்புகள்

குறிப்பு: இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

14.2 இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

14.2.1 பரீட்சை நடைமுறை –இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

**பாட இலக்கம் (01) – பொது நிர்வாகமும் நிதி முறைமைகளும் 3 மணித்தியாலங்கள் ( 100 புள்ளிகள்)**

* **பகுதி I – பொது நிர்வாகம் – நேரம் 1½ மணித்தியாலங்கள் –(50 புள்ளிகள்)**

(அ) தாபன விதிக்கோவையின் VI இலிருந்து VIII வரை மற்றும் XII, XIV, XXIV, XXVII, XXVIII ஆகிய அத்தியாயங்கள் உள்ளடக்கப்படும்.

(ஆ) 2009, பெப்புருவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

(இ) 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்கம் (கூட்டிணைக்கப்பட்ட) சட்டம் மற்றும் அதன் 2004 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கத் திருத்தச் சட்டம்.

*** பாகம் II - நிதி நடைமுறைகள் - கால நேரம் 1 1/2 மணித்தியாலங்கள் - (புள்ளிகள் 50)**

(ஈ) நிதிப் பிரமாணங்கள் - (அத்தியாயம் X தவிர்ந்த) நூலகங்களினால் மேற்கொள்ளப்படும் கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிரமாணங்கள்.

**பாடம் இலக்கம் (02) - நூலக நிறுவனம் - கால நேரம் 03 மணித்தியாலங்கள் - (புள்ளிகள் 100)**

(அ) மாகாண நூலகப் பிரகடனம்
(ஆ) நூலகக் குழுக்கள்
(இ) நூலகப் பொருட்களைப் பாதுகாத்தல்
(ஈ) வாசகர் கல்வி மற்றும் மக்கள் தொடர்பு
(உ) நூலக வகைகள் மற்றும் சேவைகள்
(ஊ) நூலக முகாமைத்துவத்தில் கவனத்திற் கொள்ள வேண்டிய எளிய தத்துவங்கள் மற்றும் உபாய வழிமுறைகள்
(எ) நூலகமொன்றில் நடைமுறைப்படுத்தக்கூடிய விரிவாக்க முறைகள்

குறிப்பு: இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

15.0 இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

16.0 இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களின் உரைப் பகுதிகளுக்கு இடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மைகள் அல்லது ஏதாவது முரண்பாடுகள் ஏற்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

என்.யு. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, மார்சு 23.

மாதிரி விண்ணப்பப்படிவம் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் II மற்றும் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2025**

**EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE II AND GRADE III OF THE SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE – 2025**

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் -2
தமிழ் -3 [ ]
ஆங்கிலம் -4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

குறியீட்டுப் பெயர் (பரீட்சையின் குறியீட்டுப் பெயர் பந்தி 03 இல் உள்ளவாறு இருத்தல் வேண்டும்) [ ]

1.0 1.1 முழுப் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ……………………………………………………………………
……………………………………………………………………………………………………………
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெலுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ............
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
(உதாரணம்: GUNAWARDHANA, H.M.S.K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) : ..........................................................................................................
..........................................................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும் :

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ( சிங்களம் / தமிழ்) :................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :.....................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

3.0 3.1 பால் பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆளடையாள அட்டை இல. : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

3.3 தொலைபேசி இலக்கம்: கையடக்க [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
அலுவலக [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4.0 நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

5.0 பிறந்த திகதி : வருடம்: [ ][ ][ ][ ] மாதம்: [ ][ ] திகதி : [ ][ ]

6.0 தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :..........................................................................................................................

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம்: ...................................................................................

7.0 7.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா? :.................................

7.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :......................................................

7.3 வங்கி /கிளை :....................................

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :........................................................................................................

7.5 செலுத்திய திகதி :...................................................................................................................

பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளவும்)

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவனென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி .................................

9.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையாற்றும் அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்குரிய இலங்கை அரச நூலகர் சேவை தரம் II அல்லது தரம் III ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைகும் ஆளாகவில்லை என்றும்,
(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,
(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

நான் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………………..
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி : ………………………………………………
பதவிப் பெயர் :……………………………………..
முகவரி :……………………………………………

03-1148

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.